விலை ரூபா: 7.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி
*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 21 | திங்கட்கிழமை (06.12.2004) | தொலைபேசி - 2223378, 2227644 | ஒலி 353

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக்கண்டத்தில் முதலாம் தர
தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

## ஜே.வி.பியின் கடிதத்தால் குழப்பத்தில் அரசு

# அனுசரணையாளராக நோர்வேயே தொடர்ந்தும் பணியாற்றவேண்டும்

### கதிர்காமர் நோர்வே அமைச்சரிடம் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சி விவகாரத்தில் தொடர்ந்தும் ஏற்பாட்டாளராக பணியாற்ற வேண்டுமென இலங்கை அரசாங்கம் மீண்டும் ஒரு தடவை நோர்வேயை வலியுறுத்திக் கேட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், நோர்வே வெளிவிவகார அமைச்சருடன் தொடர்புகொண்டு இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இது தொடர்பாக வலியுறுத்திக் கூறியுள்ளார்.

நோர்வே அரசாங்கம் தொடர்ந்து தனது ஏற்பாட்டாளர் பணியை முன்னெடுக்கவேண்டும் என்ற ஜனாதிபதியின் வேண்டுகோளின் பிரகாரம் லக்ஷ்மன் கதிர்காமர் நோர்வேயுடன் தொடர்புகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசாங்கம் நோர்வே மீது நம்பிக்கை இழந்துவிட்டது. சமாதான நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கும் விடயத்தில் நோர்வே காட்டிவரும் அக்கறையீனமே இதற்குக் காரணமாகும் எனக் குறிப்பிட்டு நோர்வே மீது பல குற்றச்சாட்டுக்களை முன்சுமத்தி ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா நோர்வேக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இந்தக் கடிதத்திற்கும் அரசாங்கத்திற்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை. ஜே.வி.பியினர் இது தொடர்பாக வெளியிட்ட கருத்து அரசாங்கத்தின் கருத்தல்ல.

அதனைவிட இக்கருத்தினை வெளியிட்ட ரில்வின் சில்வா அமைச்சரவை அமைச்சருமல்ல. ஜே.வி.பி ஆனது ஆளும் கூட்டமைப்பு அரசாங்கத்தில் ஒரு கட்சியே தவிர அது ஆட்சி செலுத்தும் ஒரு அரசாங்கம் அல்ல என, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், நோர்வே வெளிவிவகார அமைச்சருக்கு விளக்கமளித்துள்ளார்.

ஜே.வி.பி தெரிவித்திருக்கும் இக்கருத்துக்களை மறந்து நோர்வே அரசாங்கம் இலங்கையின் சமாதான விடயத்தில் தொடர்ந்தும் அக்கறை (12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சியில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படவில்லை

## ஐ.தே.க. வருடாந்த மாநாட்டில் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டு



(நமது நிருபர்)

**தடைப்பட்டு தேக்கநிலை அடைந்துள்ள சமாதான முயற்சிகளை மீளவும் முன்னெடுத்துச் செல்வதற்குரிய அர்ப்பணிப்பும் தேவையும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் இல்லை என்றும், சமாதான முயற்சிகள் குறித்த தெளிவுடன் அது செயற்படவில்லை என்றும் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் 50 ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் சமாதான நடவடிக்கைகளில் கவனம் செலுத்தாமல் ஜனாதிபதியும், அவரது கூட்டமைப்பு அரசாங்கமும் ஆட்சியை தக்கவைத்துக் கொள்வதிலேயே நோக்காகச் செயற்படுகின்றது.

இந்த நிலையை தொடர்ந்து தக்கவைத்துக்கொள்வதற்காக பல்வேறு அரசியல் தந்திரோபாயங்களை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இந்த அரசியல் தந்திரோபாயம் நாட்டுமக்களைப் பெரிதும் பாதித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் பங்காளிக்கட்சியாகச் செயற்பட்டு வரும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) சமாதான நடவடிக்கைகளுக்கு வெளிப்படையாகவே தடைகளை ஏற்படுத்தி வருகிறது. (12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதில் ஜனாதிபதி உறுதியாக இருக்கின்றார்

### ஆயர்களிடம் ஜயந்த தனபால

ஒன்றரை வருடங்களாகத் தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் முன்னெடுக்கப்படுமென அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள ஆயர்கள் குழுவை கடந்த வியாழக்கிழமை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்ததாக இக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட ஆயர்கள் தெரிவித்தனர்.

ஆயர்கள் குழுவைச் சந்தித்த ஜயந்த தனபால, ஜனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதில் உறுதியாக இருக்கிறார் என்றும் அரசதரப்புத் தகவல்கள் அடிக்கடி நோர்வே அனுசரணையாளர்களுக்கு தெரிவிக்கப்படுகின்றன என்றும் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. எதிர்க்கட்சி தலைவரும் சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வலம்புரி செய்திக்கு "தாதியர்கள்" எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்றைய வலம்புரியின் எட்டாம் பக்கத்தில் வெளியான 'இவர்களும் தாதியர்களா' என்ற செய்தி தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதியர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

மேற்படி செய்தி தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் 73 தாதியர்கள் கையொப்பம் இட்டு வைத்தியசாலையின் தற்போதைய பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி சு.ரவிராஜ் அவர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் வலம்புரிச் செய்தி தமக்கு ஆழ்ந்த கவலை அளித்துள்ளதாகவும், அது விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிடில் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

தாதியர்களினால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தின் பிரதியை வலம்புரிக்கு அனுப்பிவைத்துள்ள (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில்

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கட்சியின் செயற்குழு ரணில் விக்கிரமசிங்கவின் பெயரை முன்மொழிய அது ஏகமனதாக கட்சி உறுப்பினர்களால்வழி மொழியப்பட்டது.ஐக்கிய தேசியக்கட்சியின் 50 வது வருடாந்த மாநாடு நேற்று நடைபெற்றது.கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இம் மாநாட்டிலேயே அடுத்த ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார். (த-8)

## யாழ். பல்கலை மாணவன் படுக்கையில் சடலமாக மீட்பு

### கரணவாயில் சம்பவம்



யாழ் பல்கலைக்கழக 2ஆம் வருட இந்துமெய்யியல் சிறப்புக் கலை மாணவன் நேற்று அதிகாலை அவரது வீட்டில் சடலமாக மீட்கப்பட்டார்.

கரணவாய் வடமேற்கு நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த இளையதம்பி கருணா (வயது 25) என்பவரே மரணமடைந்தவராவார்.

இச்சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது, இரவுவேளை தொலைக்காட்சி பார்த்துவிட்டு வீட்டுக்குச்சென்ற பிரஸ்தாப மாணவன் அதிகாலை படிப்பதற்காக தன்னை நித்திரையிலிருந்து எழுப்பி விடுமாறு தாயாரிடம் சொல்லிவிட்டு உறங்கிவிட்டதாக கூறப்படுகிறது.

மகனின் வேண்டுகோளுக்கிணங்க தாயார் அதிகாலை 4.30 மணியளவில் நித்திரையிலிருந்து எழுப்பிய போது எழும்பவில்லை. மகனின் நித்திரையைக் குழப்ப நினைக்காத தாய் அப்படியே விட்டுவிட்டு மீண்டும் காலை 6.30 மணியளவில் எழுப்பியபோது மூச்சுப் பேச்சற்ற நிலையில் காணப்படாதாகவும் கூறப்பட்டது.

(த -101,74,106)

## இன்று ஒரு தகவல்

# ஆத்திகமும் நாத்திகமும்

ஆத்திக நாத்திக வாதங்கள் உலகம் உருவான காலம் முதலே ஆரம்பித்து விட்டது. உலகம் உள்ளவரை இதுவும் இருக்கும். அதனால் அதைப் பற்றிப்பேசி இப்போதைக்கு நாம் ஒரு முடிவுக்கு வரமுடியாது. எந்தப் பாதையில் போனாலும் நமக்கு ஒரு ஞானம் தெளிவு ஏற்படவேண்டும அதுதான் முக்கியம்.

ஸ்ரீராமகிருஷ்ண பரமகம்சர் ஒரு உதாரணம் சொல்கிறார். குரங்கு இருக்கிறதே. அது தனது குட்டியைத் தூக்கிச செல்வதைப் பார்த்திருப்பீர்கள். அதேபோல் பூனையும் தனது குட்டியை தூக்கிச் செல்வதைப் பார்த்திருப்பீர்கள். இரண்டுக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் உள்ளது. அதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? குரங்கு விடயத்தில் குட்டி தனது தாயைப்பற்றிப்பிடித்துக்கொள்ளும் ஆனால பூனை அப்படி இல்லை தாய் தனது குட்டியைக் கவ்விப்பிடித்துக் கொள்ளும்.

குரங்குக் குட்டி தனது தாயை தானே பிடித்துக் கொள்ளும் அது தன்னையே சார்ந்திருக்கிறது. அதனால் அது கீழே விழாமல் இருப்பது அதன் கையிலேயே உள்ளது. தாய்க் குரங்கு அது பாட்டுக்கு கிளைக்கு கிளை தாவிப் போய்க் கொண்டேயிருக்கும். குட்டி பிடியை விட்டு விட்டால் கீழே விழ வேண்டியது தான். தன்னையே சார்ந்திருக்கும் குரங்குக் குட்டியின் நிலை இது. ஆனால் பூனைக் குட்டியின நிலை இப்படி அல்ல. அது உள்ள இடத்திலிருந்து தனது தாயைப் பார்த்துப் பரிதாபமாகக் கத்தும்.

தாய்ப் பூனை ஓடிவந்து தனது குட்டியை கவ்வித் தூக்கிக் கொண்டு போகும். பூனைக்குட்டி தன்னைச் சார்ந்திருப்பதில்லை. அது தனது தாயையே சார்ந்திருப்பதனால் அதற்கு அபாயம் ஒன்றுமில்லை. இதை மனிதன் யோசித்துப் பார்க்க வேண்டும் என்கிறார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

மனிதன் தன்னையே சார்ந்திருப்பதற்கும் இறையருளைச் சார்ந்திருப்பதற்கும் உள்ள வித்தியாசம் இது தான். எப்படி இருந்தாலும் இரண்டு வகையான கொள்கையும் உலகம் உள்ளவரை இருக்கும் என்பது தத்துவ ஞானிகளின் கருத்து. ஏனென்றால் இந்த விவாதத்தில் உறுதியாக ஒரு முடிவுக்கு வருவது மிகவும் கஷ்டம்தான்.

ஒரு ஆற்றங்கரையோரமாக அரசமரம் இருந்தது. அதன் அடியில் ஒரு பெரிய கருங்கல்லால் செய்யப்பட்ட கனமான சிலை. ஆத்திகர் ஒருவர் அதைச் சுற்றிவந்து கன்னத்தில போட்டுக் கொண்டார். இந்த சமயத்தில் அந்த வழியாக நாத்திகர் ஒருவர் வந்தார். அவர் கையில் ஒரு நாய்க் குட்டியைப் பிடித்துக் கொண்டு வந்தார். ஆத்திகர் சிலையைச் சுற்றி வருவதைப் பார்த்ததும் இவருக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

"என்ன ஐயா! இந்தக் காலத்திலும் இப்படி இருக்கிறீர்களே" என்றார். "எனக்கு கடவுள் நம்பிக்கை இருக்கிறது. அதனால் சுற்றி வருகிறேன்" என்றார் அவர். "எனக்கு நம்பிக்கை இல்லை அதனால் சிரிக்கிறேன்" என்றார் இவர். இரண்டு பேருக்கும் விவாதம் ஆரம்பித்துவிட்டது. "எதற்கும் நிரூபணம் வேண்டும்" என்றார் அவர். நிரூபணம செய்ய முடியாதது தான் அது. உணர்வு மூலம் புலப்பட வேண்டியது" என்றார் இவர். இப்படி பேசிக் கொண்டே போகிறார்களே தவிர முடிவு கிடைக்கவில்லை.

கடைசியாக ஒரு சோதனை செய்து பார்ப்போம் என்ற முடிவுக்கு வந்தனர். அந்த நாத்திகர் தான் இந்த யோசனையைச் சொன்னார். "இப்போது நீங்கள் உயிரில்லாத அந்தச சிலையை நம்புகிறீர்கள். நான் உயிருள்ள நாய்க்குட்டியை நம்புறேன. நீங்கள் நம்பிக்கை வைத்திருக்கும் அந்தச சிலையைத் தூககி இந்த ஆற்றில் போடுவோம். அதேபோல் நான் நம்பிக்கை வைத்திருககும் இந்த நாய்க்குட்டியையும் தூக்கி ஆற்றில்போடுவோம். இவ் இரண்டில் எது நீந்திக் கரையேறி நம்மிடம் வந்து சேருகிறது என்று பார்ப்போம்" என்றார்.

இந்த சவாலை ஆத்திகர் ஏற்றுக்கொண்டார். ஆனால வேறு மாதிரியாக "நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்கிறேன் ஆனால் இப்படிச் செய்வோம். நான் நம்பிக்கை வைத்துள்ள இந்த சிலையை இப்படிப் போட்டு அதன் மேல் உங்கள் நாய்க்குட்டியை தூக்கிப் போடுவோம் அதன் பின் அதே மாதிரி உங்கள் நாய்க் குட்டியை இப்படிப் போட்டு அதன்மேல் சிலையைத் தூக்கிப் போடுவோம் என்ன ஆகிறதென்று பார்க்கலாம்" என்றார்.

இவர் இப்படிக் கேட்டது தான் தாமதம். அவர் நாய்க் குட்டியைப் பிடித்துக் கொண்டு வந்த வழியே போய்விட்டார். இவர்களிருவரும் இப்படிப் பிரிந்து போய்விட்டாகளே தவிர விவாதம முடிந்துவிடவில்லை. அது என்றும் இருக்கும். ஆனால் ஒன்று அகங்காரம் உள்ளவரைக்கும் மனிதனுக்குக் கஷடம் இருந்து கொண்டு தான் இருக்கும். அதைப் புரிந்துகொண்டால் போதும்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தெல்லிப்பழை வைத்திய அதிகாரி பிரிவில் இளவயது கர்ப்பவதிகள் தொகைஅதிகரிப்பு

## வைத்திய அதிகாரி ந.கனகரத்தினம் அதிர்ச்சித் தகவல்

(சுதுமலை)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மட்டும் இவ் வருடம் ஆரம்பத்தில் இருந்து முதல் 10 மாதங்களில் மட்டும் 29 கருச்சிதைவுகள் ஏற்பட்டுள்ளதாகத் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி ந.கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் கடமை புரியும் குடும்ப சுகாதாரசேவைகள் உத்தியோகத்தர்கள்,சுகாதாரப்பரிசோதகர்களுக்கு விசேட தாய், சேய் நலத் திட்டப் பயிற்சி ஒன்று பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் இ.தெய்வேந்திரம் தலைமையில் 3 நாட்கள் நடைபெற்றது.

இதில் விசேட உரையாற்றிய வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்ததாவது, கடந்த வருடம் தெல்லிப்பழை சுகாதாரப் பிரிவில் 24 கருச்சிதைவுகளும் 2002 ஆம ஆண்டு 30 கருச்சிதைவுகளும காணப்பட்டன. ஆனால் கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது இவ் வருடம் இத்தொகை பாரிய அதிகரிப்பைக் காட்டுவதாகவும் இதுமட்டுமல்லாது சட்டவிரோத கருச்சிதைவுகளும் பல இடங்களில் அதிகரித்து வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் சட்டவிரோத கருச்சிதைவுகள் மூலம் தாய் மரணம் அடையும் ஆபத்தும் உள்ளது பற்றியும் மக்களிற்கு அறிவூட்டுவது மிகவும் அவசியம் எனவும் தெரிவித்தார்.

இதனைத் தவிர இளவயதுக் கர்ப்பங்களும் தற்போது அதிகரித்து வருவதாகவும் கடந்த ஒக்டோபர் மாதத்தில் மட்டும் 34 இளவயதுக் கர்ப்பங்கள் தெல்லிப்பழை பிரிவில் ஏறபட்டுள்ளதாகவும் தெரிவித்த தெல்லிப்பழை சுகா தார வைத்திய அதிகாரி,

இவற்றை ஓரளவேனும் தவிர்ப்பதற்குப் பாடசாலை சுகாதார மன்றங்கள் ஊடாக விழிப்புணர்வு செயற்பாடுகளை சுகாதார உத்தியோகத்தர்கள் பரவலாகச் செய்வது அவசியம். இதுதவிர ஆசிரியர்கள், பெற்றோர்களை இணைத்து இப்பிரச்சினைகளை முன்னுரிமைப்படுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். சமூக மட்ட நிறுவனங்கள் ஊடாகவும் இதுபற்றிய அறிவூட்டல் நிகழ்வுகளை ஏற்படுத்துவது அவசியம்.

தொலைக்காட்சி நாடகங்கள், சினிமாப்படங்கள் போன்றவை இன்று மாணவர்களின் கல்விக்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளது. இதுவே இளவயதுத் திருமணங்களுக்கும காரணமாகின்றது.

கர்பபகாலங்களில் ஒரு தாயின் சகல கவனிப்புகளும் சரியாகப பேணுவதன் முக்கியத்துவம், போஷாக்கு வளர்ச்சி மற்றும் ஒழுங்காகச் சிகிச்சை நிலையம் வந்து பரிசோதனைகளை மேற்கொள்ளல் போன்றவற்றால் கருச்சிதைவுகளையும், குறை மாதப் பிரசவங்களையும் தவிர்க்க முடியும் எனவும் வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (ப-252)

# கல்வித்துறைக்கு இம்முறை அதிகளவு நிதி ஒதுக்கீடு?

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக கல்வித்துறைக்கு கூடுதலான நிதி ஒதுக்கப்படவுள்ளது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நுகே கொடவில் உள்ள பாடசாலையொன்றில் நடைபெற்ற பாசுளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டின் இளைய தலைமுறையினருக்கு சிறந்த வசதிகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டுமென்பது ஜனாதிபதியினதும், அரசாங்கத்தினதும் நோக்கமாகும்.

இநத நோக்கத்துடனேயே அரசு கல்வித்துறைக்கு கூடுதலான நிதியை ஒதுக்கத் தீர்மானித்துள்ளது.

இவை தவிர போதைப்பொருள் பழக்கத்தில் இருந்து இளைஞர்களையும், யுவதிகளையும் பாதுகாப்பதற்கு உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க-60)

## இராசி பலன்

06.12.2004
கார்த்திகை 21, திங்கட்கிழமை
நவமி பிற்பகல் 3.16 மணிவரை
உத்தரம் மாலை 6.01 மணிவரை
சுபநேரம் 12.17-1.47 மணிவரை
இராகு காலம்7.47-9.17 மணிவரை
விநாயகர் விரதம் 10ம் நாள்
கார்த்திகை திங்கள் விரதம்

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், நிலை மாற்றம், சுவாரஸ்யமான நிலை, தேகநலன். |
| இடபம் | முயற்சி தாமதம், குடும்பக் கவலை, உடல் நலக்குறைவு, வேலைச்சுமை. |
| மிதுனம் | எடுத்தகாரியம் தாமதமாகும், வாகன சுகம், தொழிலில் ஆர்வம். உடல் சோர்வு |
| கடகம் | வாக்குமேன்மை, பிரயாண நன்மை, தானலாபம், காரியம் கைகூடும். |
| சிங்கம் | கற்பனை மிகுதி, காரிய தாமதம், தன விரயம், விவாதம். |
| கன்னி | புதிய முயற்சி, நண்பர் சந்திப்பு, விருந்து பசாரம், பிரயாண நன்மை. |
| துலாம் | சயன சுகக்குறைவு, உறவினர் மனஸ்தாபம், எதிர்பாராத நன்மை, தனவிரயம். |
| விருச்சிகம் | சகோதரர் உதவி, தொழில்லாபம், சத்துரு ஜெயம், எடுத்தகாரியம் கைகூடும். |
| தனுசு | புதிய விடயம், நண்பர் உதவி, காரிய அனுகூலம், தொழில் மேன்மை. |
| மகரம் | சரீரப்பிரயாசை, எதிர்பாராத செலவு, காரிய தாமதம், புதிய திட்டமிடல். |
| கும்பம் | தொழில் கஷ்டம், வாகன பயம், வீண் பிரச்சினை, உடல் வியாதி. |
| மீனம் | பிரயாணம், முயற்சி கைகூடும், குடும்ப நன்மை, செல்வாக்கு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
– வளவன்

## சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ பண்ணிசைப் போட்டிகள்

(மருதங்கேணி)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்படவிருக்கும் திருவாசக விழாவிற்கான பண்ணிசைப் போட்டிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

பாடசாலை மாணவர்களிடையே 3 பிரிவாக நடாததப்படவுள்ள இப்போட்டிகளில் பண்ணிசையுடன் சமய அறிவும் பரீட்சிக்கப்படும்.

போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பணப் பரிசுடன் சான்றிதழ்களும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள திருவாசக விழாவில் வழங்கப்படும்.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் 'சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமம், செல்வச்சந்நிதி, தொணடமனாறு' என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம். (ப-35,)

## தேர்தலுக்கான திகதியை அறிவிக்ககோரி மனுத்தாக்கல்

(கொழும்பு)

இலங்கையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை அறிவிக்குமாறு தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடக்கோரி கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு உயர் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கம்பஹாவைச் சேர்ந்த சட்டத்தரணி தர்மதாச கோமஸ் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

ஜனாதிபதி இரண்டு தடவை பதவிப் பிரமாணம் செய்தமை தொடர்பாக எழுந்துள்ள சிக்கல்கள் காரணமாக அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எப்போது என தெரியாமல் மக்கள் குழம்பிப் போய் இருக்கின்றார்கள். இதன் காரணமாகவே இதற்கான திகதியை தேர்தல் ஆணையாளர் அறிவிக்கவேண்டும் என மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். (க)

## நூலகங்களுக்கு நோர்வே 11 மில்லியன்

(கொழும்பு)

கலாசார அமைச்சு நாடளாவிய ரீதியில் அமைத்து வரும் கலாசார மையங்களில் உள்ள நூலகங்களுக்கான நூல்களின் கொள்வனவுக்காக நோர்வே தூதரகம் 11 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

இதற்கான காசோலை கடந்த வெள்ளிக்கிழமை நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கரினால் கலாசார அமைச்சர் விஜிதஹேரத்திடம் கையளிக்கப்பட்டது. (இ-4)

# செய்தித்துளிகள்

## நடமாடும் சேவை

(மருதங்கேணி)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வடமராட்சி கிழக்கிலுள்ள இரண்டு கிராமசேவகர் பிரிவில் இலவசமாக நடமாடும் வைத்திய சேவையை நடாத்தி வருகிறது.

குடத்தனை கிராமசேவகர் பிரிவில் ஒவ்வொரு புதன்கிழமை காலையிலும், பொற்பதி கிராமத்தில் பிற்பகலிலும் இந்த வைத்திய சேவை நடத்தப்பட்டு வருகிறது. (ப-35)

## நாற்காலி வழங்கல்

(பொன்னாலை)

தமிழ்ழ தேசியத் தலைவரின் பிறந்த தினத்தன்று வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு சக்கரநாற்காலி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இச் சக்கர நாற்காலியை பணணாகத்தைச் சேர்ந்த அமரர் பண்டிதர் அ.ஆறுமுகம் குடும்பத்தினர் வழங்கியுள்ளனர். (ப-49)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் கலை விழாவும் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் பொ.கணேஸ்வரலிங்கம் தலைமையில் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இநநிகழ்வில், உடுவில் கோட்டக் கலவிப் பணிப்பாளர் செ.குபேரநாதன் வாழ்த்துரை வழங்கவுள்ள அதேநேரம் முதன்மை விருந்தினராக செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகனும், சிறப்பு விருந்தினராக ஏழாலை மகாவித்தியாலய இளைப்பாறிய பிரதி அதிபர் ஐ.பாலசிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற)

## கருத்தரங்கு

(பருத்தித்துறை)

எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று கடந்த முதலாம் திகதி பருத்தித்துறை பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் மு.ப.11.00 மணிக்கு பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலர் ச.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.(ற-108,9)

## கண்கெட்ட திருடர்கள்

(சில்லாலை)

வடலியடைப்பில், ஏழை வயோதிபர் ஒருவரின் சிறு கொட்டிலின் மேல் விரிக்கப்பட்டிருந்த தறப்பாள் நள்ளிரவில் விஷமிகளால் திருடப்பட்டிருக்கிறது.

கண்பார்வையற்ற 74 வயதான இவ் வயோதிபர் அந்நியரின காணியில் தனியாகவே அக் கொட்டிலில் வாழ்ந்து வந்தார்.

அயலவர்கள் காட்டிய அக்கறையை அடுத்து கிராம சேவகரால் அத் தறப்பாள் அவருக்கு வழங்கப்பட்டது.மழை காரணமாக அத்தறப் பாளை தன்வீட்டு கூரைமீது அவர் விரித்திருந்த போதே இது திருடப்பட்டுள்ளது.

பெய்த பெருமழையின் போது கொட்டிலில் மழைநீர் ஒழுகி நிரம்பியதால் வயோதிபரின் அவல நிலை கண்டு அயலவர்கள் மிகவும் கவலையடைந்தனர்.(ப-58)

## வீடியோ படக்காட்சி

(துன்னாலை)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் மிதிவெடி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வீடியோ படக்காட்சி காண்பிக்கப்பட்டுவருகின்றது.

பருத்திததுறை, கரவெட்டி பகுதிகளில் உள்ள பாடசாலைகள் பொது இடங்களில் மிதிவெடி சம்பந்தமான ஒளிநாடாகாட்சியைக் காண்பித்து வருவதுடன் மிதிவெடி, வெடிபொருள் சம்பந்தமான கருத்துரைகளையும் நிகழ்த்தி வருகின்றனர்.(க-101)

## கோரிக்கை

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை தெற்கு பேச்சி அம்மன் கோவில் வீதி போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் சேறும் சகதியும் நிறைந்து காணப்படுகின்றது.

இதனால் இவ் வீதியைத் திருத்தித் தரும்படி கிராம மக்கள் சார்பாக வலி. மேற்குப் பிரதேச செயலாளர், வலி. மேற்கு பிரதேச சபைச் செயலாளர் மற்றும் விசேட ஆணையாளர் ஆகியோருக்கு மகஜர்கள் வாயிலாகப் பல தடவைகள் கோரியும் இன்னமும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. (ப-49)

## போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபையின் 'கலாவித்தகர்' பட்டம் வழங்கும் அவைக்காற்றும் நிகழ்வுக்குரிய போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 11, 12 ஆம் திகதிகளில் சங்கீதப் பரீட்சைகள் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் 18,19ஆம் திகதிகளில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பரத நாட்டிய செய்முறைப் பரீட்சைகளும் நடைபெறவுள்ளன. (ற-5)

## ஒளிவிழா

(மருதங்கேணி)

குடத்தனை தென்னிந்திய திருச்சபை பாலர் பாடசாலையின் வருடாந்த ஒளிவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இது பாடசாலை இயக்குநர் வணபிதா ராஜன் றோகான் தலைமையில் நடைபெறவுள்ளது.(ப-35)

## கூட்டம்

வலி.மேற்குப் பிரதேச செயலகத்தின் மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ப-20)

★ ★ ★

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பாடசாலைகளிலுள்ள தரம் - IIற்குரிய அதிபர்களுக்கான கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப.2.30 மணிக்கு சாவகச்சேரி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட சகல அதிபர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். (ற-29)

## பொது மண்டபம் அமைப்பு

(ஊர்காவற்றுறை)

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பள்ளம்புலம் என்னும் கிராமத்தில் பொது மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

போரூட் நிறுவனத்தின் 5 இலட்சம் ரூபா நிதியுடன் இப் பொதுமண்டபம் அமைக்கப்படுகின்றது. (ப-75)

## வீதி சேதம்

யாழ்ப்பாணம் கொட்டடியில சேதமடைந்த நிலையிலுள்ள முஸ்லிம் கல்லூரி வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாமல இருப்பதால, அவ்வதியூடாகப் பயணம் செய்ய முடியாமல் இருப்பதாக பிரயாணிகள் தரபபில் சுட்டிக்காட்டப்படுகிறது.

படிப்படியாக முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்தில் குடியேறி வரும் நிலையில், பல ஆண்டுகளுககுப் பின்னர், ஒஸ்மானியா கல்லூரி மீளவும் இயங்க ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில், இவ் வீதியை விரைவில் புனரமைத்துத் தருமாறு அவ்வீதியைப் பயன்படுத்துவோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற)

# காரைநகருக்கான சிற்றூர்தி சேவையை விஸ்தரிக்கக் கோரி மகஜர் கையளிப்பு

(காரைநகர்)

காரைநகருக்கான தனியார் போக்குவரத்து சிற்றூர்திச் சேவையை மேலும் விஸ்தரிக்கக் கோரி காரைநகர் சிற்றூர்திச் சேவைச் சங்க தலைவருக்கு காரைநக[illegible] பொதுமக்கள் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

முப்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கையொப்பமிட்டுக் கையளித்துள்ள அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளத[illegible]வது,

காரைநகர் மேற்கு வீதி சேதமடைந்துள்ளமையினால் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலையினர் மேற்கு வீதியூடான போக்குவரத்துச் சேவையினை இடைநிறுத்திய போதும் சிற்றூர்திச் சேவைகளைத் தொடர்ந்தும் நடத்தி வருகின்றமைக்கு நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளதோடு, யாழ்ப்பாணத்தில் இருந்து காரைநகருக்கான இரவு சேவையை பிற்பகல் 7.30 மணிவரைக்கும் நடாத்த வேண்டுகின்றோம்.

காரைநகரில் இருந்து வந்து யாழ்.நகரக் கடைகளிலும், பொது நிறுவனங்களிலும் வேலை செய்கின்ற பலர் இப் பகுதிக்கான சீரான போக்குவரத்து சேவை இன்மையால் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

[illegible]லால் தாங்கள் மக்கள் நலன் கருதி இரவு 7.30 மணிக்கு 784 ஆம் இல பஸ் சேவையை விஸ்தரிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-246)

## வீதி சேதம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று சுண்டிக்குளம் வீதியில் புனரமைப்பு வேலைகள் மந்தகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ் வருடத்திற்குள் முடிக்கப்பட வேண்டிய இவ்வீதியின் புனரமைப்பு வேலைகள் மந்த கதியில் இடம்பெற்று வருவதால் மக்கள் பெரும் இடையூறுகளை அனுபவித்து வருகின்றனர்.

அத்துடன், இப்பகுதியில் களிமண்ணால் போடப்பட்ட வீதிகள் அனைத்தும் மழை நீரால் அரிக்கப்பட்டுப் பெரும் சேதமடைந்துள்ளது. (ப-43)

# பெண்களை இம்சைப்படுத்தி வந்த போலிச் சாமியார் மாட்டுப்பட்டார்

(கொழும்பு)

போலில் சாமியார் வேடம் பூண்டு பெண்களை இம்சைப் படுத்தி வந்த அயல் நாட்டைச் சேர்ந்த சாமியார் ஒருவரை பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர்.

இவருடன் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இச் சம்பவம் கொழும்பு கொம்பனித தெருப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

பொலிஸார் இருவர் பூஜை ஒன்று செய்வதற்காக வந்துள்ளதாகக் கூறி குறித்த போலிச சாமியாரைக் கைது செய்துள்ளனா.

கொழும்பு கொம்பனித் தெருப்பகுதியில் உள்ள சொகுசு விடுதியொன்றில் தங்கியிருந்தே இந்தச் சாமியார் பூஜைகள் மேற்கொண்டு வந்துள்ளார்.

இச் சாமியார் பல்வேறு முறைகளில் பு,ஜைகள் நடாத்துவதாகக் கூறி இவரிடம் வந்த பல பெண்களை பல்வேறு இம்சைகளுக்கு உள்ளாக்கியதாகப் பொலிஸார் மேற்கொண்டு வரும விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. (க-8)

# காரை ஈழத்துச் சிதம்பரத்தின் உற்சவகால ஏற்பாடுகள் தீவிரம்

## உதவி அரச அதிபர் தலைமையில் குழு ஒன்று அமைப்பு

காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலயத்தின் திருவாதிரை உற்சவத்தை சிறப்பாக நடத்துவதறகு காரைநகர் உதவி அரச அதிபர் அலுவலகத்தால் விரிவான ஏற்பாடுகள். செய்யப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஈழத்துச் சிதம்பரத்தின் திருவாதிரை உற்சவத்திற்கு உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிலையில் உற்சவ காலத்தில் பக்தர்களின் நலன் கருதியே இவ்வாறான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காகக் காரைநகர் உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நாளை செவ்வாய்க்கிழமை உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உற்சவகால ஒழுங்குகள் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் போக்குவரத்து ஒழுங்குகள், மின்சாரம், சுகாதாரம், விற்பனைக் கூட ஒழுங்குகள், வாகன தரிப்பிடம், சட்டமும் ஒழுங்கும் போன்ற விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

இவ் ஒழுங்குகளை நெறிப்படுத்துவதற்கு உதவி அரச அதிபர் தலைமையிலான செயற்பாட்டுக் குழு ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. (ப-246)

# புதிய நடைமுறை மூலம் 9466 பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

கலவியமைச்சு நாட்டிலுள்ள 9ஆயிரத்து 466 பாடசாலைகளிலும் 6 பாடசாலை மட்ட திட்டமிடல் என்ற புதிய நடைமுறையை அறிமுகப்படுததவுள்ளது.

இது தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டு பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

இப் புதிய நடைமுறையூடாக குறிப்பிட்ட பாடசாலைக்குத் தேவையான அளவு நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ள முடியுமெனக் கூறப்படுகின்றது.

இதற்கமைய 2006 ஆம் ஆண்டிலிருந்து இப்புதிய நடைமுறையூடாக நிதி ஒதுக்கீடு உட்பட பல முக்கிய நடைமுறைகள் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

2006 முதல் 2010 வரையுள்ள காலப்பகுதிக்கான இடைககாலக் கல்வித்துறை திட்டமொன்றும் இதனூடாகத் தயாரிக்கபபடவுள்ளமை குறிப்பிடததக்கது. (க-9)

# முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்த மாற்றுக்குழுவும் இ.தொ.காங்கிரஸும் இணைந்து செயற்பட முயற்சி ?

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ"ம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாற்றுக் குழுவாகச் செயற்படும் அமைச்சர் குழுவும் சிறுபான்மை இன மக்களின் நலன் கருதி பொது விடயங்களில் இணைந்து செயற்படும் முகமாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னி மாவட்ட அபிவிருத்தியமைச்சர் ரிஷாத் பதியுதீன் இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வடகிழக்கு மக்களுடைய ஆணையைப் பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களாகவும், மாற்றுக்குழுவாகவும் இயங்குகின்ற நாங்கள் எந்தவொரு அரசியல் கட்சிகளுடனும் அங்கத்தவர்களாக இணையப் போவதில்லை.

நாங்கள் இன்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்களாகவே இருந்து கொண்டிருக்கின்றோம். எம்மைப் பொறுத்தவரையிலே பல கட்சிகளுக்கு நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணும் முகமாக ஆதரவு வழங்கி வருகிறோம்.

அதேபோல இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்ற மலையக மக்களுடைய ஆணையைப் பெற்றிருக்கின்ற அக் கட்சியுடனும் நாங்கள் பேச்சுவார்த்தை நடாத்தி, பொதுவான சிறுபான்மை சமூகத்தைப் பாதுகாக்கின்ற விடயங்களில் நாங்கள் ஒத்த கருத்துடன் செயற்படுவதற்கான பேச்சுவார்த்தைகளிலே இறங்கியிருக்கின்றோம் என்றார். (க-4)

# தமிழக மீனவர்களின் அத்து மீறலை தடுக்க மீன்பிடி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடிக்கும் நடவடிக்கையினைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மீன்பிடி மற்றும நீரியல் வள அமைச்சர் சந்திரசேன விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இந்திய மத்திய அரசாங்கத்திடனும், தமிழ்நாட்டு அரசுடனும் பேச்சுவார்த்தை நடாத்தியதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டு அரசாங்க அதிகாரிகள் இந்திய மீனவர்கள் தொடர்பாகக் கொண்டுள்ள தளர்ந்த கொள்கைகள் காரணமாகவே மீனவர்கள் சட்டவிரோதமாக இலங்கைக் கடற்பரப்புக்குள வருவதாகவும் இதனால் சட்ட நடவடிக்கையினை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக மீன்வளத்தைக் கொண்ட வட-கிழக்குக் கடற்பரப்பில் மீன்பிடித்துறை பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யுத்தத்தின் காரணமாகத் தமிழ்நாட்டிற்கு அகதிகளாகச் சென்ற பல இலங்கையர்களே, இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்பரப்புக்கு அழைத்து வருவதாக அமைச்சர் குற்றஞ்சாட்டினார். (க-4)

# தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டை விநியோகிக்கும் விசேட செயற்றிட்டத்துக்கு அமைய அடையாள அட்டை இல்லாதவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முப்பது இலட்சம் அடையாள அட்டை விநியோகிக்கும் செயற்றிட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேர்தல்களின் போது வாக்காளர்களிடம் அடையாள அட்டை கட்டாயமாக இருக்க வேண்டும் என்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலத்துக்கு அமையவே இத்திட்டம் விரைவாக மேற்கொள்ளப்படுகின்றது.

பிரதேச செயலாளர்கள் ஊடாக இதற்குரிய விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருவதாக மக்கள் பாதுகாப்பு நீதி மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

இவ் விண்ணப்பங்கள் முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அடையாள அட்டைகள் வழங்கப்படும். (ற-4)

# தொழிலாளர் சட்டங்களில் மாற்றங்கள் செய்யவேண்டும்

## சுயாதீன தொழிற்சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

1930 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை அமுலிலுள்ள தொழிலாளர் சட்டங்களில் தற்போதைய நிலவரப்படி மாற்றங்களை மேற்கொள்ளவேண்டும் என பொதுச்சேவை சுயாதீன தொழிற்சங்கங்களின் செயலாளர் ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

அவர் செய்தியாளர் மாநாட்டில் பேசும் போது, இவற்றை சர்வதேச தரத்திற்கேற்றவாறு மாற்றுவதே இதன் நோக்கமாகும் எனத் தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பிரதிநிதிகள் பலர் இதில கலந்து கொண்டிருந்தனர்.

இதில் தொழிலாளர்களின் சுகாதாரம், தொழிலாளர் சுரண்டல், தொழிலாளர் பற்றாக்குறை போன்றன தொடர்பாக இதில் கலந்துரையாடப்பட்டது.

மேற்படி திருத்தங்கள் தொடர்பான பிரேரணைகள் தொழிலமைச்சர் சதாவுடசெனவிரட்னவிற்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் கையளிக்கப்படவுள்ளன.

இதன்படி ஒரு தொழிலாளர் குற்றவாளியாக்க் காணப்படின் இதுவரை காலமும் அமுலில் இருந்த 500 ரூபா பணமும் 1 நாள் சிறைத் தண்டனையும் அதிகரிக்கப்படவுள்ளன. (க-6)

# வீதி பாரிய சேதம் மக்கள் அவலம்

(பொன்னாலை)

வட்டு- மாவடி மூளாய் வீதியில பாரிய குன்று குழிகள் காணப்படுகின்றன.

இதனால் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் வாகனங்கள் மற்றும பாதசாரிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்..

இக்குன்று குழிகள் நிரவப்பட்டு ஒரு வருடம் கழிந்த நிலையில் மண்டும் அதே இடங்களில - பருவமழையையடுத்து, பாரிய குன்று குழிகள் தோன்றியுள்ளன.

இதனால், பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் உட்பட பாதசாரிகளின் சீருடைகளில் வீதியில் செல்லும் வாகனங்கள் தண்ணீர விசிறியடித்துச் செல்வதாகப் பொது மக்கள் தரப்பில் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இவ் வீதியைப் புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பொது மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற-49)

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிகக் கொடுப்பனவு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதாந்தம் 10 ஆயிரம ரூபா மேலதிகக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது.

பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் மில்ரொய் பெர்னாண்டோ இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்த மேலதிக கொடுப்பனவு காரணமாக தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டும் ரயில் மற்றும் பஸ் இலவசப் போக்குவரத்துச் சலுகை நீக்கப்படவுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தற்போது ரயில் மற்றும் பஸ்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலவச அனுமதிகளை பயன்படுத்துவதில்லை.

தமது சொந்த வாகனங்களையே அவர்கள் பயன்படுத்தி வருகின்றார்கள். இதற்காக தீர்வையற்ற வாகனம் வழங்கப்பட்டுள்ளதோடு, மாதாந்தம் 12 ஆயிரம் ரூபா முதல் 22 ஆயிரம் ரூபா வரை எாிபொருள் செலவும வழங்கப்படுகின்றது.

ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும், ஜே.வி. பி. காட்டிய எதிர்ப்பு காரணமாக இது முன்னர் கைவிடப்பட்டது. (ற)

# மருதங்கேணி உ.அ.பிரிவின் உப அலுவலகம் குடத்தனையில்

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரின் உப அலுவலகம் ஒன்று குடத்தனையில் இயங்கிவருகிறது. இவ் அலுவலகம் ஒவ்வொரு மாதமும் முதலாம், மூன்றாம் வியாழக்கிழமைகளில் இயங்குகிறது.

இதனால், இப் பகுதியிலுள்ள 5 கிராமசேவகர் பிரிவிலுள்ள மக்கள், தங்கள் தேவைகளை சுலபமாகப் பெற்றுக்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.


இதுவரை காலமும் இப் பகுதி மக்கள் முகமாலை ஊடாக மருதங்கேணிக்கு சென்று மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையின் சேவைகளைப் பெற்றுவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப-35)


## நிதி உதவி

பாராளுமன்ற உறுப்பினர்களான மாவைசேனாதிராசா, பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரால் வடபிரதேச நல்லொழுகக சம்மேளனத்தின் பிரசார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதறகாக ஒலிபெருக்கி சாதனங்கள் வாங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ப-20)











இலங்கை வர்த்தக வங்கியின் யாழ். கிளையில் "அருணலு" சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் மாணவர்களில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று வர்த்தக வங்கியின் யாழ். கிளையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வங்கி முகாமையாளர் ரவீந்திரா உரையாற்றுவதையும், கலந்துகொண்ட சிறப்பு விருந்தினர்களையும், பரிசில் பெற்ற மாணவர்களையும், மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள். ஞா. ஐங்கரன்)

# மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

## வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்

### நூலாசிரியர் பற்றிய அறிமுகம்

"யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்" என்ற இந்த ஆய்வு நூலின் ஆசிரியரான புலவர்-பண்டிதர் பொ. ஜெகந்நாதன் பல்துறை சார் ஆய்வாளர், தமிழ் அறிஞர் 1908ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ஆம் திகதி வேலணையில் பிறந்த இவர் பயிற்றப்பட்ட ஆசிரியராகத் தனது பணியைத் ஆரம்பித்த போதிலும் இலக்கியம், அரசியல், வரலாறு ஆகிய துறைகளிலும் தமது புலமை முத்திரையைப் பொறித்துள்ளார்.

இவர் எழுதிய "அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி" என்ற ஆய்வு நூல் இவரைத் தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு அடையாளம் காட்டியது. இந் நூல் கிடைப்பது இப்பொழுது அரிதாக இருப்பினும் இந் நூலைப் பற்றி பசுமலை சோமசுந்தர பாரதியார், பிரம்ம ஸ்ரீ சி.கணேசையர், சு.நடேசபிள்ளை, பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை முதலிய அறிஞர் பெருமக்கள் தெரிவித்த மதிப் புரைகள் மூலம் இந் நூலின் பெருமையையும் மகிமையையும் உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

"இந் நூல் புதுவது கிளக்கும் ஓர் ஆராய்ச்சி நூலாகும். முத்தமிழ்க் கருவூலமாகிய சிலப்பதிகாரத்துக்கு உரைகண்ட அடியார்க்கு நல்லாரது சரித்திர சம்பந்தமாக இது காறும் தமிழுலகம் அறியாத சில முக்கிய செய்திகளை தக்க ஆதாரம் காட்டி இந்நூல் விளக்குகிறது" என இந் நூலுக்கு சு.நடேசபிள்ளை அளித்துள்ள மதிப்புரையொன்றே இந் நூலின் பெருமைக்குப் போதிய சான்றாகும்.

இலக்கியத்துறையில் தடம் பதித்த ஜெகந்நாதன் இலங்கையிலேயே தமிழர்களுக்கென தமிழரசு ஒன்று இருந்ததா எனக் கேட்கும் அரை வேக்காட்டு அரசியல்வாதிகளுக்குச் சாட்டையடி கொடுக்கும் முகமாகவும் இளந்தலைமுறையினர் இலங்கையில் சீருடனும் சிறப்புடனும் விளங்கிய தமிழரசர்கள் பற்றிச் செவ்வனே அறிந்து கொள்ளவேண்டுமென்பதற்காகவும் தந்த நூலே 'யாழ்ப்பாணத் தமிரசர் வரலாறும் காலமும' என்பதாகும்.

'யாழ்ப்பாணத் தமிழரசர் காலம் யாழ்ப்பாணத் தமிழரின் சுதந்திரகாலம். அக்காலத்தில் தமிழரசர்கள் ஆட்சி புரிந்தார்கள். அவர்கள் வரலாறு பொய்யாய், பழங்கதையாய் இல்லாமல் போகாமல் உறுதிப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தினாலேயே இந் நூல் எழுதப்பட்டது என நூலாசிரியரே குறிப்பிட்டுள்ளது அவரது தொலைநோக்குச் சிந்தனைக்கு எடுத்துக் காட்டு. யாழ்ப்பாணத் தமிழரசு 13ஆம் நூற்றாண்டில் தான் ஆரம்பமானதென்ற புதிய வரலாற்றாசிரியர்களின் கணிப்பை மறுத்து யாழ்ப்பாணத் தழிழரசு 8ஆம் நூற்றாண்டிலே உருவாகிவிட்டதென பற்பல ஆதாரங்களுடன் நிறுவப்பட்டுள்ள இந்நூல் காலத்தின் முக்கிய தேவையாகும்.

யாழ்ப்பாணத் தழிழரசர்கள் பற்றிய வரலாற்றுண்மையை அறிந்து கொள்ள இந் நூல் மிக்க பயனுடையதாக இருக்கும். இதனை யாழ். இலக்கிய வட்டம் வெளியிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது. (ஆ.ர்)

### இந்நூல் குறித்த கலாநிதி க.குணராசாவின் (செங்கையாழியான்) மதிப்புரை...

அறிஞர் பொ.ஜெகந்நாதன் அவர்களால் ஆக்கப்பட்டு, 1944 ஆம் ஆண்டு தென்னிந்தியப் பதிப்பகம் ஒன்றினால் அச்சிட்டு வெளியிடப்பட்ட "அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய் ச்சி" என்ற ஆய்வு நூலினைப் படித்தபோது எனக்கு வியப்பும், நம் நாட்டவர் ஒருவர் ஆக்கிய நூல் என்பதால் பெருமிதமும் ஏற்பட்டன. படித்து முடித்த போது நிச்சயமாக இந் நூல் தத்துவக் கலாநிதிப் பட்டத் திற்கு விதந்துரைக்கத்தக்க ஆராய்வு நூல் என்ற எண்ணம் மனதில் தோன்றியது. இன்று அதே அறிஞரின் "யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும" என்ற இந் நூலினைப் படித்தபோது, என் தொடக்கத்து எண்ணம் மீண்டும் வலுப்பெறுவதை உணர்கிறேன்.

நமது நாட்டில் பிறந்து வளர்ந்து இலக்கிய ஆக்கங்கள் மூலம் தமிழைப் பெருமைப்படுத்தும் அறிஞர்கள் பலரை நாம் சரிவரக் கணிக்கவில்லை. மதிக்கவில்லை. நாற்பத்தி மூன்று வருடங் களுக்கு முன் ஆராய்ச்சி நூல் ஒன்றினை எழுதி வெளியிட்ட அறிஞர் பெருமகன் குறித்து நாம் மறந்து விட்டோம்.

புலவர் ஜெகந்நாதன் அவர்க ளுக்கு இன்று எழுபத்தொன்பது வயதாகிறது. 1908 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி வேலணையில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை வேலணை அமெரிக்க மிஷன் பாடசாலையிலும், சரஸ்வதி வித்தியாசாலையிலும் பெற்றார். பின்னர் திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையில் ஆசிரியப் பயிற்சி பெற்றார். 1933 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பாடசாலைகளிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார். வேலணை சரஸ்வதி வித்தியாசாலை, இடைக்காடு புவனேஸ்வரி வித்தியாசாலை, கல்வியங்காடு செங் குந்தாக் கல்லூரி, யாழ்ப்பாணம் சேணிய தெருப் பாடசாலை, நயினாதீவுத் தமிழ்க் கலவன் பாட சாலை எனப் பல பாடசாலை இந்த அறிஞரின் கற்பித்தலால் சிறப்புப் பெற்றன.

ஜெகந்நாதன் அவர்கள் தனது பதினெட்டாவது வயதில் கவிதைகள் ஆக்கத் தொடங்கினார். ஏட்டில் இடம்பெறாத, அச்சு வாகனமேறாத கவிதைகள் பல நூறு. வேலணைப் பெருங்குளம் முத்துமாரியம்மன் மீது இவர் பல பதிகங்களைப் பாடியுள்ளார். அவை அச்சிலுள்ளன. ஜெகந்நாதனின் கவிதைகளைக் கேட்ட, படித்த வேலணையூர் மக்கள் அவருக்குப் புலவர் என்ற கௌரவத்தை அளித்தார்கள.

புலவர் ஜெகந்நாதனின் இலக்கியப் பணியில் தலையாயது என அவர் ஆக்கிய "அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி" நூலினைக் குறிப்பிடலாம். சிலப்பதிகாரத்திற்கு முதன் முதல் உரையெழுதிய அடியார்க்கு நல்லாரும் இலங்கையில் அமைச்சராகவிருந்த அடியார்க்கு நல்லாரும் ஒருவரேயென ஜெகந்நாதன் அவர்கள் இந்து ஆராய்ச்சி நூலில் நிறுவியிருக்கிறார். "இம் முடிவு புதுமையேயாயினும் தக்க சான்றுகளோடு மாறுகொள்ளாத வரையில் உறுதியுடைய தென் பதில் இழுக்கில்லையெனலாம். இந்நிலையில் இவ்வாசிரியரின் அறிவும் ஆற்றலும் ஊக்கமும் உழைப்பும் பாராட்டிற் குரியன" என செந்தமிழ்ப் பத்திரிகையில் மதுரைத் தமிழ் சங்கம் மதிப்புரை எழுதியிருக்கின்றது.

"இந்நூல் புதுவது கிளக்கும் ஓர் ஆராய்ச்சி நூலாகும். முத்தமிழ்க் கருவூலமாகிய சிலப் பதிகாரத்திற்கு உரைகண்ட அடியார்க்கு நல்லாரது சரித்திர சம்பந்தமாக இது காறும் தமிழுலகம் அறியாத சில முக்கிய செய்திகளை இந் நூல் தக்க ஆதாரங்காட்டி விளக்குகின்றது" என அறிஞர் சு.நடேசபிள்ளை மதிப்புரை தந்துள்ளார். "இந் நூல் தமிழுலகிற்கு ஓர் அரிய விருந்தாகும். இந் நூலிலிருந்து ஜெகந்நாதனுடை பொறுமையான ஆராய்ச்சி வண்மையும் நுண்மதியும் தெரி கின்றது" என மகாவித்துவான் பிரம்ம ஸ்ரீ சி.கணேசையர் பாராட்டியுள்ளமையொன்றே இந் நூலின் சிறப்பிற்குப் போதுமான சான்று. இந் நூல் இதுவரை காலமும் ஈழத்தில் வெளி வந்த சிறந்த ஆய்வு நூல்களிலொன்று என இலங்கை இலக்கியப் பேரவையின் விருதினையும் பெற்றது.

அறிஞர் பொ. ஜெகந்நாதனின் ஆற்றலை அறிஞர் பெருமக்கள் பலரும் இணங் கண்டிருக் கிறார்கள். அவரது ஒரேயொரு ஆராய்ச்சி நூலிலிருந்து அவரின் திறனையும் மதிநுட்பத்தையும் உணர்ந்து போற்றியிருக்கிறார்கள். அத்தகைய அறிஞர் இன்று தனது இரண்டாவது ஆராய்ச்சி நூல் ஒன்றினை வெளியிட்டிருக்கிறார். யாழ்ப்பாணச் சரித்திரத்தின் மெய்மையான ஆய்வொன்றினை, மூன்று தசாப்தங்களாக ஆராய்ந்து கண்ட முடிவுகளைக் கொண்டு, யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்" என்ற நூலாக வெளியிட்டுள்ளார். இந் நூல் மிக விரிவாகவும் நுட்பமாகவும் ஆராயப்பட்டிருக்கிறது. தக்க ஆதா ரங்களின் துணை கொண்டு அவரது கருதுகோள்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. *(தொடரும்)*

# கால்நடை வளர்ப்பாளர்களுக்கு பருத்தித்துறையில் பயிற்சி வகுப்பு

(மருதங்கேணி)

கால்நடைகளை ஆரோக்கியமாக வளர்த்தல் அவற்றை பராமரித்தல் தொடர்பான பயிற்சி வகுப்பு ஒன்றும் கலந்துரையாடலும் எதிர்வரும் 7ஆம் திகதி செவ்வாய்க் கிழமை 8.30 மணிக்கு பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பு தொழில்நுட்பங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

அத்துடன் 2005 ஆம் ஆண்டுக்கு வழங்கப்படவுள்ள உதவிகள், மானியங்கள், நிவாரணங்கள் தொடர்பான விளக்கங்களும் வழங்கப் படும்.

இபபயிற்சி வகுப்பில் கால்நடை வளர்ப்போரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு பருத்தித்துறை கால்நடைவைத்தியஅதிகாரி எஸ்.வசீகரன கேட்டுள்ளார். (ப-35)

# 'மிலேனிய அபிவிருத்திக் குறிக்கோள்' தொடர்பான பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள அரச திணைக்கள உயரதிகாரிகள், ஐ.நா. முகவர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர்களுக்கான மிலேனிய அபிவிருத்திக் குறிக்கோள பற்றிய பயிற்சிப்பட்டறை ஒன்று நடாத்தப்படவுள்ளது.

கொள்கை அபிவிருத்தி அமுலாக்கல்அமைச்சின் அனுசரணையுடன் நாளை செவ்வாய்க்கிழமை யாழ்.பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இப் பயிற்சிப்பட்டறை நடைபெறவுள்ளது. (ரு-19)

# பாடசாலைகளின் பணிகளுக்காக சிற்றூழியர்களை நியமிக்குக!

## வடமராட்சி கிழக்கு அதிபர்கள் கோரிக்கை

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கிலுள்ள பாடசாலைகளுக்கு சிற்றூழியர்களை நியமிக்க உதவுமாறு வடமராட்சி கிழக்கு அதிபர்கள் யாழ். பாராளுமன்ற உறுபபினர்களிடம் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற அதிபர், ஆசிரியர்களுடனான சந்திப்பின் போது இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

அதிபர்கள் இதுபற்றி கருத்து தெரிவிக்கையில், சிற்றூழியர்களின் வேலைகளும் அதிபர்கள் தான் செய்ய வேண்டியுள்ளதாகவும் வேலைப்பளு அதிகமாக இருப்பதாலும் சிற்றூழியர்கள் இல்லாது பாடசாலையை நடாத்துவது பெரும் சிரமமாக உள்ளதாகவும் தெரிவித்தனர். (ப-35)

# ஐ.நா.செயலர் பதவிக்கு ஜயந்தவை பிரேரிக்க முடிபு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பதவிக்கு சமாதான செயலகப பணிப்பாளர் ஜயந்த தனபாலவின் பெயரை பிரேரிபபது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவருக்கு உலக நாடுகளின் ஆதரவினைப் பெறும் முயற்சியில் தற்போது அரசாங்கம் ஈடுபட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளார்.

அடுத்த தடவை ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பதவி ஆசிய நாடொன்றுக்கு வழங்கப்படவிருப்பதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-4)



சாவகச்சேரியில் உள்ள தனியார் கடையொன்றில் திருடிய கைத் தொலைபேசிகளையும், அதன் உதிரிகளையும் திருட்டுக் கும்பல் ஒன்று யாழ்.நகரில் வைத்து விற்பனை செய்த போது அவற்றை யாழ். பொலிஸார் கைப்பற்றினர். (படம் :- ஐங்கரன்)


## விவாத அரங்கு - 7

விடயம்

தனியார் கல்வி நிறுவனங்கள்
மாணவர்களின் கல்வியை
சீரபடுத்துகின்றனவா?
சீரழிக்கின்றனவா?
உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி
வையுங்கள்

அனுப்பவேண்டிய முகவரி
விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# க.பொ.த (சாதாரண தரம்)
# மாதிரிப் பரீட்சை – 2004

## விஞ்ஞானமும் தொழிநுட்பமும் பகுதி I

ஆக்கம்: திருமதி K.மகேந்திரன் (ஆசிரியர்)
வட்டு மத்திய கல்லூரி.

நேரம்: 1மணி

*சரியான விடையின் கீழ் கீறிடுக*

01.வலுவை அளவிடும் சர்வதேச அலகு
(i)யூல் (ii)நியூட்டன் (iii)வாற்று (iv)பஸ்கால்

02.தாவர இலையிலுள்ள பச்சையமற்ற கலம்
(i)வேலிக்காற் புடைக்கல இழையக்கலம் (ii)மேற்றோல்கலம்
(iii)கடற்பஞ்சுப் புடைக்கல இழையக்கலம் (iv)காவற்கலம்

03.உயிர் அங்கியின் கலத்திலுள்ள பாரம்பரியத்துடன் தொடர்பான பகுதி
(i)இழைமணி (ii)கரு (iii)நிறமூர்த்தம் (iv)இரைபோசோம்

04.நிலங்கீழ் தண்டில் உணவு சேமிக்கும் தாவரம்
(i)மரவள்ளி (ii)முள்ளங்கி (iii)வத்தாளை (iv)இஞ்சி

05.Xஎனும் மூலகத்தின் அயனின் குறியீடு $X^{+3}$. இம்மூலகம் ஒட்சிசனுடன் சேர்ந்து உருவாக்கும் சேர்வையின் சூத்திரம்
(i)XO (ii)$XO_2$ (iii)$X_2O_3$ (iv)$X_2O$

06. $Feso_4$ கரைசலிலிருந்து இரும்பை இடம்பெயர்க்கக்கூடிய மூலகம் பின்வருவனவற்றுள் எதுவாகும்?
(i)Pb (ii)Mg (iii)Ag (iv)Cu

07.அலுமினியத்தைக் கொண்ட தாதுப்பொருள் பின்வருவனவற்றுள் எதுவாகும்?
(i)கேமற்றைற்று (ii)தொலமைற்று
(iii)அப்பரைற்று (iv)பொக்சைற்று


08.குளிர்நீருடன் தாக்கமடைந்து $H_2$ வாயுவைத் தரும் உலோகங்கள்
(i)K, Na (ii)Mg, Zn (iii)Al, Zn (iv)Ca, Mg

09.மின்குமிழ்களை நிரப்பப் பயன்படும் வாயு
(i)ஐதரசன் (ii)குளோரின் (iii)ஆகன் (iv)காபனீரொட்சைட்டு

10.கூற்று: மின்வெப்பமாக்கிச் சுருள் நிக்குரோம் கலப்பு உலோகத்தாலானது.
காரணம்: நிக்குரோம் தறறடை கூடிய உலோகம அத்துடன் மின்கடத்தாறு குறைந்தது.
(i)கூற்று சரி காரணம் பிழை
(ii)கூற்று காரணம் இரண்டும் சரி
(iii)கூற்று காரணம் இரண்டும் பிழை
(iv)கூற்று காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

11.வழியிலுள்ள காபனீரொட்சைட்டு வாயுவை உறிஞ்சக்கூடிய இரசாயனப் பதார்த்தம்.
(i)CaO (ii)$Cacl_2$ (iii)NaOH (iv)$Na_2O$

12.




இம்மின்சுற்றில் பாயும் மின்னோட்டம்.
(i)0.25A (ii)0.5A
(iii)1.5A (iv)1A

13.பிளெமிங்கின் இடக்கை விதிக்கு அமைய இயங்கும் கருவி
(i)மின்மணி (ii)மின்மோட்டர் (iii)டைனமோ (iv)மின்மாற்றி

14.மின்காந்தத்தூண்டல் தத்துவத்திற்கமைய தொழிற்படும் கருவி.
(i)மின்மாற்றி (ii)டைனமோ
(iii)தூண்டற் சுருள் (iv)மேற்கூறிய யாவும்.

15.பொருள் ஒன்றிற்கு வழங்கப்படும் வெப்பக்கணியம் தங்கியுள்ள காரணி.
(i)பொருளின் திணிவு (m) (ii)வெப்பநிலை மாற்றம் Ø
(iii)பொருளின், தன்மை (iv)மேற்கூறிய யாவும்

16.தன்வெப்பக்கொள்ளளவின் அலகு
(i)J/Kg (ii)$J/Kg^0C$ (iii)Cal/g (iv)$Cal/g/^0C$

17. $CaCo_3 \xrightarrow{\Delta} Cao + Co_2$
Ca = 40 C=12 O = 16
10கிராம் கல்சியம் காபனேற்றைச் சூடாக்குவதன் மூலம் பெறப்படும கல்சியம் ஒட்சைட்டின் திணிவு
(i)56g (ii)5.6g (iii)28g (iv)2.8g

18.யூரியா $CO(NH_2)_2$ சிறந்த நைதரசன் வளமாக்கி. இதிலுள்ள நைதரசன சதவீதம்
(i) $\frac{28}{60}$x100% (ii) $\frac{14}{60}$x100% (iii) $\frac{4}{60}$x100% (iv) $\frac{2}{60}$x100%

19.Dஎன்னும் மூலகத்தின் அணுஎண் 15. மூலகம் D பற்றிய கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.
(a)மூலகம் கூட்டம் $\overline{V}$ ஐச் சேர்ந்தது
(b)மூலகம் D ஐதரசனுடன் உருவாக்கும் சேர்வை பங்கீட்டு வலுப் பிணைப்பைக் கொண்டது.
(c)மூலகம் D குளோரினுடன் உருவாக்கும் சேர்வை அயன் பிணைப்பைக் கொண்டது.
(d)மூலகம் ஒட்சிசனுடன் சேர்ந்து உருவாக்கும் சேர்வை அமில இயல்புடையது.
(i)acd சரியானவை (ii)abd சரியானவை
(iii)cd சரியானவை (iv)ac சரியானவை

20.தன் மகரந்தச்சேர்க்கை நிகழ்வதைத் தடுக்கப் பூவானது கொண்டுள்ள இசைவாக்கம்
(i)இருகாலமுதிர்வு (ii)தன் மலட்டுத்தன்மை
(iii)சமமில்லாத் தம்பவுண்மை (iv)மேற்கூறிய யாவும்

21.பரவல் செயற்பாடு மூலம் நிகழ்வது
(i)தாவரங்களில் வேர்மயிர் ஊடாக நீர் உறிஞ்சல்.
(ii)தாவர இலையின இலைவாய் ஊடாக நிகழும் வாயுப்பரிமாற்றம்.
(iii)நுரையீரலின் சிற்றறைகளில் நிகழும் வாயுப்பரிமாற்றம்.
(iv)2,3 சரியானவை.

22.ஆவர்த்தன அட்டவணையில் திரவ நிலையிலுள்ள மூலகங்கள்
(i)Na, K (ii)Cl, Br (iii)Br, Hg (iv)I, Br

23.திரவஅமுக்கம் தங்கியுள்ள காரணி
(i)திரவத்தின் ஆழம் (ii)திரவத்தின் அடர்த்தி
(iii)புவியீர்ப்பு ஆர்முடுகல் (iv)மேற்கூறிய யாவும்

24.76cm இரச நிரலினால் தாங்கப்படும் அமுக்கம் பஸ்கால் அளவுத் திட்டத்தில் பின்வருவனவற்றுள் எதுவாகும்?
(i)$10^2$ (ii)$10^3$ (iii)$10^4$ (iv)$10^5$

25.60W 240V மின்குமிழினூடாகப் பாயும் மின்னோட்டம்
(i)0.5A (ii)0.25A (iii)0.75A (iv)1A

26.பின்வருவனவற்றுள் எது பங்கீட்டுவலுச் சேர்வையாகும்?
(i)HCl (ii)NaCl (iii)$MgCl_2$ (iv)$AlCl_3$


27.பின்வரும் ஒட்சைட்டுகளில் ஈரமான நீலபாசிச்சாயத்தாளை சிவப்பு நிறமாக மாற்றும் ஒட்சைட்டு எது?
(i)$Na_2O$ (ii)$P_2O_3$ (iii)Cao (iv)MgO

28.தாக்கவீதத் தொடரில் ஏனைய உலோகங்களிலிருந்து வேறுபட்ட உலோகங்கள் பின்வருவனவற்றுள் எவையாகும்?
(i)Sn Pb (ii)Cu Hg (iii)Au Ag (iv)Zn Mg

29.உலோக ஒட்சைட்டைக் காபனால் தாழ்த்துவதன் மூலம் பிரித்தெடுக்கப்படும் உலோகம் பின்வருவனவற்றுள் எதுவாகும்?
(i)Na (ii)K (iii)Al (iv)Fe

30.வீட்டு மின்சுற்றில் மின்சாதனங்களைப் பயன்படுத்தும் குறுஞ்சுற்றுக் காரணமாக அளவுக்கதிகமான மின்னோட்டம் பாய்வதால் உள்ள ஆபத்திலிருந்து பாதுகாக்கப் பயன்படும் மின்சாதனம் பின்வருவனவற்றுள் எதுவாகும்?
(i)உருகி (ii)தலைமை ஆளி (iii)புதை (iv)இடறு ஆளி

31.




இப்பழம் பரம்பலடையும் காரணி
(i)காற்று (ii)நீர்
(iii)விலங்கு (iv)வெடித்துப் பரவல்

32.சீமெந்து தயாரித்தலில் களிமண், சுண்ணாம்புக்கல்லுடன் சேர்க்கப்படும் பதார்த்தம்?
(i)எரிசோடா (ii)ஜிப்சம் (iii)சலவைச்சோடா (iv)சிலிக்கா

33.கண்ணாடி தயாரிப்பில் பயன்படும் மணலில் உள்ள இரசாயனப் பதார்த்தம்
(i)$SiO_2$ (ii)CaO (iii)$Na_2Co_5$ (iv)$CaCo_3$

34.இரத்தினக்கற்கள் பளபளப்பாகத் தோன்றக் காரணம்.
(i)ஒளிமுறிவு (ii)ஒளித்தெறிப்பு
(iii)முழுஅகத்தெறிப்பு (iv)இரசாயனச்சேர்வை

35.பெற்றோலியத்தின் கூறுகளில் காபன் எண்ணிக்கை கூடிய பதார்த்தங்கள்
(i)மீதேன், புறொப்பேன் (ii)பெற்றோல், மண்ணெய்
(iii)டீசல், மசகு எண்ணெய் (iv)தார், மெழுகு

36.தூய பதார்த்தம் பற்றிய சரியான கூற்று
(i)குறித்த உருகுநிலை கொதிநிலை கொண்டது.
(ii)ஏகவினமானது.
(iii)கூறுகளின் இயல்பைக் கொண்டிருப்பதில்லை.
(iv)மேற்கூறிய யாவும்

37.தூய பதார்த்தம் அல்லாதது பின்வருவனவற்றுள் எதுவாகும்?
(i)செம்பு (ii)கொண்டிஸ் (iii)துரிசு (iv)பித்தளை

38.வளிமண்டலத்திலுள்ள நைதரசன் சதவீதம்
(i)20% (ii)0.03% (iii)78% (iv)1%

39.மஜரின் தயாரிப்பில் ஊக்கியாகப் பயன்படுவது
(i)Fe (ii)$Al_2O_3$ (iii)Ni (iv)$Mno_2$

40.மாப்பொருளின் இரசாயனச் சூத்திரம்
(i)$CH_2O3_n$ (ii)$C_6H_{12}O_6$ (iii)$C_{12}H_{22}O_{11}$ (iv)$[C_6H_{10}O_5]_n$




## துயிலுமில்லப் பயணம்...

மழைக்கும் மண்டியிடா
மக்கள் கூட்டம்
கார்த்திகைப் பூ பூக்கும்
காலத்திலே குடைபிடித்து
மாவீரர் துயிலுமில்லப் பயணம்...
மழை பெய்யப் பெய்ய
வெளுத்துப்போன வானமாய்
மனங்கள்...

இ.நவகேதீஸ்வரன்,
சுன்னாகம்.

## இடம்பெயர்வா? போராட்டமா?

பாதகர் செயல்களினால்
சொநத இடங்களையும் சொத்துககளையுமிழந்து
வேதனை தருமிந்த இயற்கைச் சீற்றத்தால்
மண்வீடுமிழந்து...
இந்த வெள்ளப்பெருக்கால் இடம்பெயர்ந்து
உயிர்காத்திட ஒன்றுகூடி
உயரிடம் நாடிச் செல்கின்றீரோ..? அன்றி
திடீர் பொருளாதார ஏற்றத்தினால்
திகைப்படைந்து போராட ஒன்றுதிரண்டு
கொடுமழையையும் பாராது
எதிர்நடவடிக்கையாக போக்குவரத்தை
எதிர்த்து மறியலிலிறங்கிவிட்டீரோ...?
இது இடம்பெயர்வா அன்றி போராட்டமா?
புரியவில்லையே!

பொ.புனிதன், வரியப்புலம்.

## அசையும் காளான்கள்

இடி முழக்கம் கேட்டு
குடைவிரிக்கும் காளான்கள்
பெய்கின்ற மழையில்
போய்வரலாம் வீதியில்
மாரிகாலத்து வசந்தம்
கோடையிலும் சுகம்தரும்!

ஜோ.ஜெஸ்ரின்,
கொழும்புத்துறை.

## எங்கே....?

கொட்டும் மழையில்
குடைபிடித்து எங்கே
வேகமாய்ச் செல்கிறீர்கள்?
படிப்பை முடித்துவிட்டு
வேலையற்றோர்
பட்டியலில் சேரவா?

ந.வவா,
உடுவில்.

# மௌனத்தின் தேடல்கள் - 38



## செய்யும் தொழலே தெய்வம்!

அடைமழை பொழிந்தாலும்
கடமையைக் கருதிற்கொண்டதால்
குடையுடன் நடைபவனி...
செய்யும் தொழிலே தெய்வம்!

மாருதி, ஆவரங்கால்.

## பள்ளம் அதிகம!

கொட்டும்மழை பாராது குடைபிடித்து
அனறாட அலுவல்களைப் பார்க்க
அவசரமாய்ச் செல்வோரே!
பாதை முழுதும் பள்ளம் அதிகம்
பார்த்துச் செல்லுங்கள்!

S. நித்தியா,
கொக்குவில்.

## எதற்காகச் செல்கின்றீர்?

வாழக்கைச் செலவு அதிகரித்து
வறுமையின் கொடூரத்தினால்
வாடிவதங்கியிருந்த நீவீரின்று
கொட்டும் மழையையும் பாராது
வாடிய முகங்களுடன் வரிசையாய்
ஆர்பபாட்டத்துடன் செல்வது எதறகாக...?
அததியாவசியப் பொருடகள் விலை
ஏற்றத தாலா?
அன்றாட வேலைநேர அதிகரிப்பாலா?

தெ.திலீவ்,
சித்தன்கேணி.

## பார்த்துச் செல்லுங்கள்...

வீதியிலும வீதியிலும்
சதியும் சகதியும் நிறைந்து
சாக்கடையான...
நகரமுடியா நகரினில்
குடைபிடித்து...
நடை பயில்வோரே!
பார்த்துச் செல்லுங்கள்
பருகுழிகள் உம் வழியில்...

V.கிரிதரன்
மானிப்பாய்.

# மௌனத்தின் தேடல்கள் - 40



அன்பு வாசகர்களே!

உஙகள் எண்ணததில் தோனறும உள்ளதது உணர்வுகளை மக்ச்சிறிய கவிதைகளாக கித் தபால் அட்டையில் வலம்புரி - சங்குநாதத திற்கு அனுபபிவையுங்கள்.

கிடைக்கவேண்டிய
இறுதித் திகதி - 12.12.2004

அனுப்பவேணடிய முகவரி:-
மௌனத்தின தேடலகள- 40
வலம்புரி - சங்குநாதம்
15, வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

## சமாதானமே!

சமாதானமே!
செத்துவிடாதே....
நீ
சூரியனாய் வரவேண்டாம்
ஏனெனில்....
இரவில் போய்விடுவாய்
நீ
சநதிரனாயும் வரவேண்டாம்
ஏனெனில்....
பகலில் நிற்கமாட்டாய்
சமாதானமே!
நீ காற்றாக வா...
நாம உறங்குகையிலும்
உனை சுவாசிக்கவேண்டும்
ஊரெல்லாம் நாம்
உன்னோடு சுற்றிவரவேண்டும்
மாநதரின்
மதவாதம் இனவாதம்
என்கின்ற கறை வியர்வைக்கு
நல் விசிறியாய்
நீயிங்கு வேண்டும்
வீடுகளில் மட்டுமல்ல....
எங்கள் இதயங்களிலும்
உனக்காய் ஒரு
பலகணி செய்கின்றோம்
வா....

சுமன்.

## நீங்கள் நல்லவர்கள்

கேள்விக்குறியாகி நிற்கின்ற
இளம் வாலைகளே!
சாதனையை உங்களிடம்
உலகம் எதிர்பார்த்திருக்க
நீங்களோ...
வேதனையைத் தருகின்ற
வெட்டி மரங்களாய்
சந்தியிலே கூட்டம்
மரத்தடியில் மகாநாடு
மதகுகளில் வேட்டை
இப்படியே நடத்துவதும்....
வீதியிலே வண்ணங்கள்
வந்துவிட்டால் பின்தொடர்ந்து
சேட்டைக்கு வழிவகுப்பதும்
கோஸ்டிமோதலில் கொடுக்கு
கட்டிக்கொண்டு
வாள்வீச்சும் பொல்லடியும்
கொடுத்தும் வாங்கியும்
கொண்டு நிற்பதை
உலகம் பார்ப்பதையும்
உலகத்தை நீங்கள் பார்ப்பதையும்
சிந்தியுங்கள்!
இளமைக் கோலமா?
இரவல் கோலமா?
இது உங்களின் தவறா?
இல்லையில்லை...
வேண்டாக் கருத்துடன்
ஓடுகின்ற ஒளிநாடாவும்
ஒலிக்கின்ற ஒலிநாடாவும்
சொந்தமண்ணுக்கு
வந்துகுவியும் செல்வமும்
கலப்பு நாகரிகமும்
உங்களைக் கௌவுகின்றன
என்ன நடக்கிறது
சிந்தியுங்கள்....!
நீங்கள் நல்லவர்கள்.

பாமா மணாளன்.

## காதல் மழையே!

மேகங்கள் வடம் பிடிக்க
மின்னல்கள் படம் பிடிக்க
மண்ணில் தடம் பதிக்க
வந்த மழையே....!

வானவில் வளைவெடுக்க
விண்மீன்கள் அடம்பிடிக்க
கடல் மீனைத் தேடி
வந்த மழையே....!

நாணலை நனைத்துக்கொள்ள
நாட்களை நகர்த்திச் செல்ல - தன
பாதங்களை நாட்டிச் செல்ல
வந்த மழையே.....!

நாயகி நாணிச் செல்ல
கூடவே நானும் செல்ல
காதல் புயலோடு
வந்த காதல் மழையே.....!

கவிக்குயில்,
கயலி.

## சாதன வளர்ச்சிகள்

அந்நாளில் எங்களுக்கோ
பாட்டுக்கேட்கப் பரமபசி
'கிராமபோன்' தட்டு
காதுகளுக்குத் தீனிபோட்டது அப்போ
காலமுருண்டோடிய
கட்டங்களில்
துவி வண்டிச் சில்லைச்சுற்றி
பழைய 'கசெற்றுகளில' பாடல் கேட்ட
ஞாபகம் – தெறி அழுத்திமின்னில
பொழிந்த் இசைமழையில்
நனைந்ததாய் ஞாபகம்
நாம் பாட்டுக்கள் கேட்ட
படிகளை நினைத்தபடி
பெருமூச்சு விட்டேன்....
சட்டென 'ரீவி' ஸ்ராட் ஆனது
ஆட்லுடன் பாடல அதில்
'றிமோல்டுடன்' நின்றான் மகன்
திரும்பினேன்
'வோக்மனுடன' நின்றாள் மகள்
கணினிகளில் கூட இப்போ
கலகலப்புப் புரிகிறது......
இன்னுமென் மனதிலந்த
'கிராமபோன' தட்டு விடுபடவேயில்லை.

ஜெ.சுபாஷினி

## பரிணாமம்

அப்பா....
ஆச்சி அடிச்சுப்போட்டா
ஏன் செல்லம் அடிச்சவ?
ஆச்சி என்று கூப்பிட்டன்
அடிச்சுப்போட்டா
இஞ்சை பாருங்கோ செல்லம்
சின்ன மாமாவையும்
குட்டி மாமாவையும் பாக்க
ஆசச கனடா போய் வந்தவ எல்லோ
இனிமேல் அவவை
ஆச்சி என்று கூப்பிடக்கூடாது
அன்ரி எண்டு கூப்பிடவேணும்
சரியோ.......
அழாதேங்கோ ஒருக்கா
சிரியுங்கோ
அப்பா சொக்கா தாறன்.

புதுக்கவி.

# காஞ்சி சங்கர மடமும் ஜெயேந்திரர் விவகாரமும்

1

காஞ்சி சங்கர மடாதிபதி ஜெயேந்திரரைக் கைது செய்ததால் இந்து மதத்துக்கு ஆபத்து என்று பி.ஜே.பி தலைவர்கள் சொல்வது சரியா?

முதலில் இந்த வழக்கும் கைதும் ஜெயேந்திரர் இந்து மதத் துறவி என்பதற்காகப் போடப்படவில்லை. அவர் ஒரு கொலை செய்ய ஏற்பாடு செய்தார என்பதே குற்றச்சாட்டு. அவருடைய மதக் கருத்துக்கள் எதற்காகவும் அவர் மீது வழக்குப் போடப்படவில்லை.

ஒரு இந்து மடாதிபதியை கைது செய்வது இந்து மதத்துக்கு விரோதமானது இல்லையா? இல்லை. அந்த மடாதிபதி சட்டப்படி குற்றம் செய்திருந்தால், அதை மூடி மறைப்பதுதான் மதத்துக்கு எதிரானது. தவிர கொலை செய்யப்பட்ட காஞ்சி வரதராஜப்பெருமாள் கோவில் நிர்வாகி சங்கரராமனும் இந்து தான். ஜெயேந்திரரைப் போலவே பிராமண



ஐய்யர் வகுப்பில் பிறந்தவர்தான். பட்டப்பகலில் அவரை கோவிலுக்குள்ளேயே வெட்டி சாய்த்தபோது ஏன் பி.ஜே.பி. காரர்கள் இந்து மதத்துக்கு ஆபத்து என்று குரல் எழுப்பவில்லை?

## சங்கரராமன் கொலைக்கான காரணம்

சஙகரராமன் •கொலை செயயப்பட்டமைக்கு தனிப்பட்ட சொத்துத் தகராறோ குடும்பத் தகராறோ அல்ல. சங்கரராமன் தொடர்ந்து சங்கர மடத்தையும் ஜெயேந்திரரையும் சின்னவர் விஜயேந்திரரையும் அவர் தம்பி ரகுவையும் விமர்சித்து கடிதங்கள் எழுதி வந்தார். மடத்தின் ஒழுக்கங்களுக்கு விரோதமாக இவர்கள் செயல்பட்டதாகவும் நிதி முறைகேடுகள் இருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார். வழக்கு தொடுக்கப்போவதாகவும் எச்சரித்தார். அப்படி எச்சரித்து கடிதம் எழுதிய சில நாட்களில் அவர் கொல்லப்பட்டார்.

ஜெயேந்திரர் கைதுக்கு வடக்கே சாதுக்களும் பி.ஜேபி தலைவர்களும் எதிர்பபு காட்டும் அளவுக்கு ஏன் தமிழ் நாட்டில் எதிர்ப்பு இல்லை? ஜெயேந்திரர் தமிழக மக்கள் எல்லாராலுமஏற்கப்பட்ட ஆன்மிக வழிகாட்டி அல்ல. எல்லா இந்துக்களுக்கும் தலைவர் அல்ல. பிராமணர்களிலும் வைணவர்களுக்கு அவர் •குரு அல்ல. ஐய்யர்களிலும் அவரை ஏற்காமல் சிருங்கேரி சஙகராச்சாரியை பின்பற்றுவோர் அதிகம் உண்டு. எனவே காஞ்சி மடம் பிராமணர்களில் ஒரு சிறு பிரிவினரின் ஆதரவைப் பெற்ற மடம் மட்டுமேயாகும். அரசியல பிரமுகர்கள், உயர் அதிகாரிகள் பக்தர்களாக இருந்ததால் ஊடகங்களில் அந்த மடதுக்கு அதிக விளம்பரப்படுத்தப்பட்டு பிரபலப்படுத்தப்பட்டது. அவருக்கு மக்கள் செல்வாக்கு எதுவும் இல்லை.

கலைஞர் கருணாநிதியைக் கைது செய்தால் தி.மு.கவினரும் ஜெயலலிதாவைக் கைது செய்தால் அ.இ.அ.தி.முகவினரும் எப்படி எதிர்ப்பு தெரிவிப்பார்களோ அதேபோல தங்கலால கைது செயயப்பட்டதற்காக ஆர்.எஸ்.எஸ். சஙகபரிவார் வகையறாக்கள் வடக்கே எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். மசூதியை இடிப்பதும், விமர்சனம் செய்யும பக்தரைக் கொலை செய்வதும் மெய்யான ஆன்மிகவாதிகள் செய்யும் காரியங்கள் அல்ல.

## கைமாறுமா...?

ஜெயேநதிரர் தலித்துகளை அரவணைத்ததால்தான் பழமை விரும்பிகள் அவருக்கு எதிராக திரண்டு, இப்போது மடத்தை விஜயேந்திரர் வசம் ஒப்படைததுவிட சதிசெய்வதாக கூறப்படுகிறது.

சங்கர மடம் எந்த நாளிலும் தலித் ஆதரவு மடம் அல்ல. ஜெயேந்திரரின் குருவாக இருந்த காலஞ்சென்ற பெரியவர் பரமாச்சாரியார் எனப்படும் சந்திர சேகரேந்திரர் ஹரி ஜனஙகளை ஆலயத்தில் நுழைய அனுமதிக்கும் போராட்டத்தை எதிர்ததார். காந்திஜி கேட்டுககொண்டும் அவர் ஒப்புக்கொள்ளவில்லை.

அண்மையில் எழுத்தாளர் உஷா சுப்பிரமணியன் என்னடம் தொலை பேசியில் தெரிவித்த ஒரு தகவல் இது. அவர்கள் குடும்பம் மரபாக சங்கரமடத்தன் பக்தர்களாக பெரும் நன்கொடையாளர்களாக இருந்தவர்கள். காலஞ்சென்ற சந்திரசேகரேந்திரர் சென்னை வரும் போது அவர்கள் வீட்டில் தங்குவது வழக்கம். சிறுமியாக இருந்த போது உஷா சுப்பிரமணியன் கண்ட காட்சி இது: காமராஜரின் அமைச்சரவையில் இருந்த தலித அமைச்சர் கக்கன் சங்கராச் சாரியாரைப் பார்க்க வந்தார். அவரை வீட்டுக்குள்ளேயே அனுமதிக்கவில்லை. தீண்டததகாதவனை சாஸ்திரப்படி நேரில் பார்த்தால் தீட்டு என்பதால் வெளியே திறந்த வெளி மைதானம் ஒன்றில நடுவே மாட்டைக் கட்டிவைத்து தண்ணீர் தொட்டி வைத்து ஒரு பக்கம் கக்கனை உட்கார வைத்து விட்டு மறுபக்கம் உட்கார்ந்துதான் சங்கராச்சாரி சந்தித்தார். விதவையானதால் இந்திரா காந்தியையும் அப்படி கிணற்றுக்கருகில்தான் சந்தித்தார். (ஆறு, குளம் போன்ற நீர் நிலைகளின் மறு கரையில் இருந்தோ மாட்டுத் தொழுவத்திலோதான் தலித்துகள், விதவைகளை சந்திக்கலாமாம். இடையில் தண்ணீர் இருப்பது தீட்டுக்கு பரிகாரமாம்).

அப்படியானால் ஜெயேந்திரர் தலித் சேரிகளுக்கெல்லாம் சென்றதும் அவர்களுக்குக் கோவில் கட்டிக் கொடுத்ததும் பெரியவரை விட இந்த விஷயத்தில் அவர் முற்போக்கானவர் என்பதைத்தானே காட்டுகிறது ?

பிராமணர் வீட்டில் வளர்ந்து வேதம் படித்த ஒரு தலித்பையன் சங்கராச்சாரியால் அடுத்த மடாதிபதியாக வாரி




சுப் பட்டம் சூட்டப்படுவதாக பிராமண எழுத்தாளர் மாலி எழுதிய நாடகத்தைக் கண்டித்தார். அந்த நாடகத்தை இனி நடத்தக்கூடாது என்று தடுத்து அவரையே நேரில் அழைத்து மிரட்டினார்.

தலித்துகள் மீது உண்மையான அக்கறை உள்ளவரானால், சங்கர மடத்தில், படித்த, தினம் குளிக்கிற பத்து தலித்துகளுக்கு வேலை போட்டாவது கொடுத்திருக்கலாமே. மடத்தின் சிறீகாரியம் நீலகண்ட ஐய்யர். மேலாளர் சுந்தரேசன் ஐய்யர். உதவியாளர் நெய் வேலி கிருஷ்ணமுர்த்தி ஐய்யர். கணக்காளர் விசுவநாதன் ஐய்யர். எழுத்தர் சேதுராமன் ஐய்யர். காமாட்சிசத்திர மேலாளர விசுவநாத ஐய்யர். ஒரு தலித் குமாஸ்தா கூடவா அவருக்குக் கிடைக்கவில்லை? தலித்துகளுடன் ஜெயேந்திரர் நண்பர் வேடம் போட்டது ஆர்.எஸ்.எஸ்சின் திட்டத்தின் ஒரு பகுதிதான். குஜராத், மத்தியப் பிரதேசம், ஒரிசா போன்ற மாநிலங்களில் தலித்துகளை பழங்குடிகளை முஸ்லிம்களுக்கு எதிராக பயன்படுத்தும் முயற்சியில் ஆர்.எஸ்.எஸ் ஈடுபட்டு வருகிறது. இங்கேயும் அதைச் செய்ய சங்கராச் சாரியைக் கொண்டு முயற்சிக்கிறார்கள்.

## ஜெயேந்திரரின் கடந்த காலம

ஒரு துறவி இப்படி கொலை செய்திருப்பாரா என்ற கேள்வி பலர் மனதிலும இருக்கிறது. அப்படிப்பட்ட அப்பாவி பக்தர்களை நம்பித்தான் இப்படிப்பட்ட போலி ஆன்மிகவாதிகள் பிழைத்து வருகிறார்கள். பல சமயங்களில் ஒருவர் இன்ன காரியம் செய்திருப்பாரா மாட்டாரா என்பதை எந்த அடிப் படையில் மதிப்பிடுகிறோம்? அவர்களுடைய கடந்த கால நடத்தையிலிருந்துதானே. ஒருவர் கடந்த காலத்தில் தவறு செய்திருந்தாலும், அதைத் திருத்திக்



கொண்டு விட்ட அடையாளம தெரிந்தால், அவரை பற்றிய மதிப்பீடு மாறலாம். ஜெயேந்திரர் வகையறாக் களின் கடந்த கால நடத்தை எப்படிப்பட்டது?

சன்யாசி என்பவர் சன்யாசம் வாங்கும்போதே மண், பொன், பெண் ஆசைகளிலிருந்தும் குடும்ப பந்தங்களிலிருந்தும் தன்னை துண்டித்துக் கொள்ள வேண்டும்.

இவர்களோ சொத்துக்களைக் குவிக்கும் வேலையில் தான் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். பெரியவர் காலத்தில் மடம் வறுமையில் இருந்தது. நான்தான் அதற்கு சொத்து சேர்த்தேன் என்று ஜெயேந்திரரே சொல்லியிருக்கிறார். அந்த சொத்துக்களை நிர்வாகம் செய்து வருவது யார் ? சாதிக்காரர்களும் குடும்பத்தினரும்தான்.

பூணூலை அகற்றி தான் எந்த சாதிக் காரனும் அல்ல என்று உணர்த்தும் சடங்கும், உயிரோடிருக்கும் தன் உறவினர்களுக்கெல்லாம் அப்போதே இறுதிச் சடங்கு செய்து அவர்களுடனான பந்தத்தை துண்டித்துக் கொள்ளும் சடங்கும் சன்யாசம் ஏற்பவர்கள் செய்யும் சடங்குகளில் உண்டு. ஆனால் சங்கர மடத்தில் இந்த சன்யாசிகளின் பூர்வாசிரம சகோதரர்கள்தானே ஆதிக்கம் செலுத்தி வந்திருக்கிறார்கள்.

சங்கரராமன் கொலை வழக்கில் ஜெயேநதிரருக்கு நெருக்கமான ஒரு பெண் சம்பந்தப்பட்டிருப்பதாக பொலிஸ் நீதி மன்றத்தில் தெரிவித்திருக்கிறது. இதில ஆச்சரியப்பட ஏதுமில்லை. விஜயேந்திரரின் தம்பி தொடர்பாகத்தான் அதிகமான பெண் விவகாரங்கள் பத்திரிகைகளில் இதுவரை வந்துள்ளன.

ஆனால் 1987ல் ஜெயேந்திரர் திடீரென மடத்தை விட்டு தண்டத்தைக் கைவிட்டு விட்டு சில நாட்கள் காணாமல் போன போது, அவர் அப்போது சாதாரண மனிதர்கள் போல உடை மாற்றிக் கொண்டு நேபாளப் பெண்ணுடன் சென்றதாகத் தான் முதலில் செய்திகள் வெளியாகின. பழைய பெரியவருடன் சமரசம் ஏற்பட்ட பிறகு அந்தச் செய்திகள் அமுக்கப் பட்டன. காணாமல் போன நாட்களில் அவர் எங்கெல்லாம் இருந்தார், என்ன செய்தார் என்பது பற்றி பெரியவரும் வெளியே பேசியது இல்லை. இன்று வரை அதிகாரப்பூர்வமாக எதுவும் சொல்லப்படவில்லை.

கடந்த 1993ல் தன்னிடம் ஜெயேந்திரர் முறைகேடாக நடந்து கொண்டது பற்றி எழுத்தாளர் அனுராதா ரமணன் இப்போது பகிரங்கமாக சொல்லும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை சில ஆண்டுகள் முன்பே, ஜெயேந்திரர் மீது எந்தக் கொலை வழக்கும் இல்லாத காலத்தில், தினமலர் ஏட்டில் அனுராதா ரமணன் எழுதத் தொடங்கிய போது எழுதவிடாமல் அவர் தடுக்கப்பட்டார்.

இளமையில் துறவு என்பது மிகவும் செயற்கையானது. இயற்கைக்கு விரோதமானது. இதைப் பத்து வயதிலும் பதினான்கு வயதிலும் சாமியாராக்கப்படும ஒருவர் இயல்பான பாலுணர்வுகளுக்கு வடிகால் இல்லாமல் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவது வருத்தத்துக்குரியது. தாம்பத்யம, லௌகீகம், பற்றி எந்த அறிவும இல்லாமல் மழலையிலிருந்தே நெய்சாதம், ஸ்லோகம் சூழலில் வளர்ந்த ஒருவரிடம் வாழ்க்கைச் சிக்கல்களுக்கு வழிகாட்டும்படி மக்கள் போவது அதை விட வேதனைக்குரியது.

## விஷேட கவனிப்பு

சங்கராச்சாரிக்கோ அவரது ஜாமீன் மனு விசாரணைக்காக விடுமுறை நாளான சனிக்கிழமையன்று விசேடமாக நீதி மன்றம் கூட்டப்பட்டது. இதே விஷேட அணுகுமுறை சாதாரண முனியன்களோ, மாரியப்பன்களோ, மாரியம்மாக்களோ, முத்துசாமிகளோ ஜாமீன் கோரும் போது கிடையாது என்பது நாடறிந்த நிலை. வீரப்பனுக்கெல்லாம் தனிப் பங்களா சிறை தயார் நிலையில் வைக்கப் பட்டது. ஜெயேந்திரரை குறைந்தபட்சம ஒரு பங்களாவில் சிறைவைத்திருக் கலாம் என்கிறார்கள்.

அத்வானி, லாலு பிரசாத் யாதவ், போன்ற அரசியல்வாதிகள் கைது செய்யப்பட்ட போது இப்படி பங்களா காவலில் வைக்கப்பட்டதைக் காட்டி இந்த வாதம் பேசப்படுகிறது. அவர்களை பங்களாவில் வைத்தது தவறு என்றுதான் சொல்ல முடியுமே தவிர, அதே தவறைத தொடர்ந்து செய்ய வேண்டும் என்று கோருவது சரியல்ல. இப்போது ஜெயேந்திரர் மிக கண்ணியமாகவே நடத்தப் படுகிறார்.

சதுர்வேதி சாமியாரை முதுகில் கைவைத்து பொலிஸ் தள்ளுகிறது. அவர் ஓடு ஓடென்று ஓடுகிறார். ஜெயேந்திரர் வழக்கிலேயே கைதாகியிருக்கும் கதிரவன் முதலானோர் பொலிஸால் நெருக்கியடித்து நீதி மன்றத்துக்குள தள்ளப்படுகிறார்கள். ஜெயேந்திரர் மீது உடன் வரும் காவலர்களின் விரல் கூடப் படுவதில்லை. தொட்டால்



தங்களுக்கு தீட்டாகி விடும் என்று பயப்படுகிறார்களோ என்னவோ. சிறைக்குள் ஜெயேந்திரருக்கு சமைத்துப் போட ஜாதி அடிப்படையில் பிராமண கைதியும் பிராமண ஏட்டும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பூஜைகள் செய்ய பூக்களும், விக்கிரகங்களும், தட்டு, கிண்ணி, செம்பு, உத்தரணி போன்ற சிறு பாத்திரங்களும் அவருக்குக் கொடுக்கப் படுகின்றன.

கொல்லப்பட்ட சங்கரராமனைப் போன்ற ஒரு கோவில் பிராமண ஊழியர் ஏதோ

## நன்றி இணையத்தளம்

ஒரு வழக்கில் கைதாகியிருந்தால் அவருக்கு தினமும் சந்தியாவந்தனம் செய்ய வசதிகள் செய்து தந்திருப்பார்களா? இல்லை. ஜெயேந்திரர் வேறு எந்தக் கைதியையும்விட சிறப்பாக நடத்தப்படுகிறார் என்பதில் சந்தேகமில்லை.

## ஏன் இந்தக் கடிதம்

அப்படியானால் ஏன் பிரதமர் மன்மோகன் சிங் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு கடிதம் எழுத வேண்டும்? எழுதியிருக்கக் கூடாது. அது தவறுதான். காஞ்சி மடத்துக்கு இன்னமும் இருந்து வரும் அரசியல் செல்வாக்கின் அடையாளங்களில் இதுவும் ஒன்று. காங்கிரஸ் கட்சிக்குள்ளேயும் மடத்தின் ஆதரவாளர்கள் பலர் நீண்ட காலமாக இருந்து வருகிறார்கள். ஜெயேந்திரர் ஆர்.எஸ்.எஸ்.பக்கம் போய்விட்டதால் அவர்களில் பலர் சற்று ஒதுங்கி நிற்கிறார்கள் என்று சொல்லலாம்.

தவிர வட மாநிலங்களில் வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலுக்கு ஜெயேந்திரர் கைதைப் பயன்படுத்த பி.ஜே.பி தீவிரமாக இருக்கிறது. அதை மனதில் கொண்டும் பிரதர் மன்மோகன் சிங் இப்படி ஒரு கடிதம் எழுதியிருக்க அரசியல் காரணமிருக்கிறது.

(நாளை தொடரும்)

# அவுஸ்திரேலிய தடுப்பு முகாமில் இலங்கையர்கள் மேற்கொண்ட உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

தம்மைத் தாயகத்துக்குத் திருப்பி அனுப்பவேண்டாம் என்று கோரி தெற்கு அவுஸ்திரேலிய அகதிகள தடுப்பு முகாமொன்றில்உண்ணாவிரதமிருந்த இலங்கையாகள் 11 பேரும் அவுஸ்திரேலிய குடிவரவு அதிகாரிகள் கொடுத்த உறுதி மொழியை அடுத்து தமது போராட்டத்தைக் கைவிட்டுள்ளனா.

தமக்கு அகதி அந்தஸ்து தரக கோாியும் தம்மைத் தாயகததுக்குத் திருப்பி அனுப்பவேண்டாம் என்று கோரியும் கடந்த இரு வாரங்களுக்கு முன்னா் தெற்கு அவுஸ்திரேலியாவிலுள்ள பக்ஸடா அகதிகள் தடுப்பு முகாமில் இரண்டு இலங்கையர்கள் சாகும் வரையிலான உண்ணாவிரதப போராட்டத்தில் குதித்தனா.

கடந்த வாரம் மேலும் 9 இலங்கையர்கள் அவாகளது போராட்டத்தில் இணைந்து கொண்டனர். போராட்டத்தால் உண்ணாவிரதிகளின் உடல்நிலை மோசமடைந்ததால் முதலில் நால்வரும் பின்னா மூவரும் வைத்தியசாலையில சோக்கப்பட்டனா.

இத்தகைய நெருக்கடி நிலையை உணாந்த அவுஸ்திரேலிய குடிவரவு அதிகாாிகள் பல் தேசிய சுதேச விவகாரத்துறை அதிகாரிகளை அழைத்துப் பேச்சு நடத்தினர்.

இந்தப் பேச்சுக்கள் தொடாபாக அகதிகள் விவகாரத்துறைப் பேச்சாளர் மாரா றொபிள்ஸ்கி கூறுகையில், "இலஙகையில் தற்போது நிலைமை பழையபடி மோசமாக ஆரம்பித்திருப்பதால் முகாமிலுள்ள இலங்கையர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக நேர்காணல் செய்து அவர்கள் தொடர்பான மீள்தயாா செய்யப்பட்ட அறிக்கையை குடிவரவு அமைச்சருக்கு அனுப்புவது என்று பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டுள்ளது. உணணாவிரதிகளின் நியாயமான கோாிக்கைக்கு இணங்கி அவர்களுக்குச் சாதகமான நடவடிக்கையையே அரசு மேற்கொண்டுள்ளது'' என்றாா.

அவா மேலும் தெரிவிக்கையில, -உண்ணாவிரதிகள் சிலருக்கு நெஞ்சுவலி, வயிற்றுவலி போன்றவற்றுக்கான அறிகுறிகள தென்பட்டதாலும் சிலரது பேச்சாற்றல் மிகவும் மெதுவான மெல்லிய ஈனக் குரலில் காணப்பட்டதாலும அவர்கள் வைத்தியசாலையில் சோக கப்பட்டாாகள. ஏனைய உண்ணாவிரதிகள் அரசின் உறுதி மொழியை அடுத்து தமது போராட்டத்தைக கைவிடுவதாக அறிவித்த போதும் உண் ணாவிரதத்தை முறிக்காமல வைததியசாலையில் சோக்கப்பட்ட தமது சகாக்கள் திரும்பி வரும் வரை காத்திருக்கிறார்கள் என்று கூறினாா். (க-8)

## வாண்மை விருத்தி கருத்தரங்கு

(தனங்கிளப்பு)

தமிழீழ கல்வி மேம்பாட்டுப பேரவையும் யாழ். கல்வி வலய முமஇணைந்து, யாழ் கல்வி வலய பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 11 வரையான வகுப்புக்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மேலதிக வாண்மை வருத்திக்கான தொடர் கருத்தரங்கினை கடந்த 3 மாதமாக யாழ். வலயக் கல்விப் பணிமனையின் முகாமைத்துவ மண்டபத்தில் நடத்தி வந்துள்ளனர்.

இதன் இறுதிநாள் நிறைவு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பிரமுகா்களும யாழ்.கல்வி வலய கல்விமானகளும கலந்துகொண்டனர். (ப-37)

## சுவீடன் பேராசிரியரின் பொது விரிவுரைத் தொடர்

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடத்தின் ஏற்பாட்டில் சுவீடன் உபசாலா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் பீற்றர்சார்க் நாளை செவ்வாய்க்கிழமை முதல எதிர்வரும் 2005 ஜனவரி 7ஆம் திகதி வரை ஒனது தலைப்புக்களில தொடா விரிவுரைகளை ஆற்றவுள்ளார்.

இவ் விரிவுரைகள் யாழ. பல கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் தினமும் பி.ப.3.00 மணிமுதல் 4.30மணிவரை இடம் பெறவுள்ளது.

புலம்பெயர்ந்தோா மத பாரம் பரியத்தைப் பேணுதல், வரலாற்றுக் காலத்தில் தமிழிடையே நிலவிய புத்த மதக்கொள்கைகள், ஈழத் தமிழும் புத்த மதமும் ஈழம் என்பதன் கருத்தும் பழந்தமிழ் இலக்கியங்களில் இச் சொல் பரவி வருதலும், வேதத்தல் புதிய கண்டுபிடிப்புகள், மதம் பற்றிய கொள்கைகள், மதமும மாக்சிசமும், சுவீடன் முதல் வட்டுக்கோட்டை வரை ஆகிய தலைப்புக்களில் விரிவுரைகள் இடம்பெறவுள்ளன.

ஆங்கில மொழியில் இடம்பெறவுள்ள இவ் விரிவுரைகளுக்குச் சமகால தமிழ் மொழிபெயர்ப்பு வழங்கப்படும். எண்பது வீத விரிவுரைகளிற்குச் சமூகமளிப் போருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. பல்கலைக்கழக துறைசார் அறிஞர்களின் தலைமையின் கீழ் இடம்பெறவுள்ள இவ் விரிவுரைகளின் இறுதியில் கலந்துரையாடல் இடம்பெறும்.சைவ அபிமானிகள், மாணவர்கள், ஆர்வமுள்ள பொதுமக்கள் இவ்விரிவுரைத் தொடருககு வருகைதந்து பயன் பெறலாமென கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவசந்திரன் தெரிவித்துளளார். (ற)

## 12 கோடி 50 லட்சம் ரூபா நட்டஈடு கோரி வைத்திய நிபுணர் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

புற்றுநோய் வைத்திய நிபுணரான வைத்திய கலாநிதி மல்லவத்தை வசந்தகுமார என்பவா 12 கோடி 50 லட்சம் ரூபா நட்ட ஈடு கோரி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், சுகாதார அமைச்சின் செயலாளா ஆகியோருக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளாா்.

மனுதாரர் மஹரகம தேசிய புற்றுநோய் வைத்தியசாலையில் கடமையாற்றிய போது எக்ஸ்ரே இயந்திரங்களைப் பயன்படுத்த நேர்ந்ததால் நச்சுக்கதிர்களின் தாக்கத்துக்குள்ளாகி நிரத்தர நோயாளியாகிவிட்டதாகவும் இதற்கு சுகாதார சேவைகள் பணிப பாளர் நாயகம், சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோரே பொறுப்பேற்க வேண்டும் என்றும் நீதிமன்றத்துக்கு முறைப்பாடு செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளாா்.

இவ் வழக்கு விசாரணை கொழும்பு மாவட்ட நீதிபதி எஸ். எம்.எஸ். சமரக்கோன் முன்னிலையில் அடுத்த ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி இடம்பெறும். (க-9)

## வரணி இடைக்குறிச்சி மக்களுக்கான மீள்குடியமர்வுக் கொடுப்பனவுகள் வங்கிகளுக்கு அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

வரணி இடைக்குறிச்சி மககளுக்கான மீள்குடியமா்வுக் கொடுப்பனவுகளுக்குரிய காசோலைகள் அந்தநத வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வரணி இடைக்குறிச்சிப் பிரதேச மக்கள், கடந்த புதனன்று தமக்குரிய மீள்குடியமாவுக் கொடுப்பனவுகள் வழங்கபபடாததை ஆட்சேபித்து யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக மறியற் போராட்டம் நடாத்தியிருந்தனர்.

இதன்போது அன்றைய தினம் செயலக அதிகாரிகளால் உறுதியளிககப்பட்டபடி, அவர்களுக்குரிய மீளக் குடியமாவுக்கான கொடுப்பனவுகளுக்குரிய காசோலைகள உரிய வங்கிகளுக்கு அனுப்பி வைககப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கொடுப்பனவுகள் இன்று திஙகட்கிழமை தொடக்கம் வழங்கப்படவுள்ளன. (ற-47)

## சிம்பாப்வேக்கு எதிரான மூன்றாவது போட்டி இங்கிலாந்து 8 விக்கெற்றுக்களால் வெற்றி

இங்கிலாந்து-சிம்பாப்வே அணிகளிடையேயான மூன்றாவது ஒரு நாள் போட்டியிலும் இங்கிலாந்து அணி 8 விக்கெற்றுக்களால் வெற்றி பெற்றிருக்கிறது.

நேற்று முன்தினம புலவாயோவில் நடைபெற்ற இப் போட்டியில, சிம்பாப்வே அணிததலை



வர் தைபு தமது அணி முதலில் துடுப்பெடுத்தாடவுள்ளதாக அறிவித்தார்.

ஆரம்பத்தில் ரெயிலரும் மற்சிக்கென்யேரியும் களமிறங்கினர். இருவரும் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்தவேளை ரெயிலர் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து இரண்டாவது விக்கெற்றுக்காக மற்சிக்கென்யேரியுடன் இப்ராசிம் இணைந்து கொண்டார். இருவரும் சிறப்பாக ஆடி 98 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். மறசிக்கெனயேரி 79 பந்துகளில் 73ஓட்டங்களைப் பெற்றபோது வோஹனின் பந்துவீச்சில் அன்டர்சனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அதையடுத்து வர்மூலன்-12, சிகும்பரா-00, மாஸகட்ஸா-21, ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

சிறப்பாக ஆடிய இப்ராசிம் 65 ஓட்டங்களைப் பெற்றபோது வோவ் பந்துவீச்சில் கொலிங்வூட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அணிததலைவா் தைபு 24 ஓட்டங்களுடன் ஜோன்ஸின் பந்துவீச்சில் அன்டர்சனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

உற்சயா 4 ஓட்டங்களுடனும் பனியங்கரா ஓட்டமெதுவும பெறாமலும் ஆட்டமிழக்காதிருந்தனர். உதிரிகளாக 14 ஓட்டங்கள் பெறப்பட்டன. சிம்பாப்வே அணி 50 ஓவர்களில் 7 விக்கெற்றுக்களை இழந்து 238 ஓட்டங்களை எடுத்தது. பந்துவீச்சில் ஜோன்ஸ-2, வோவ், கைல்ஸ், வோஹன் ஆகியோர் தலா 1 விக்கெற்றையும் வீழ்த்தினர்.

238 என்ற வெற்றி இலக்



கோடு களமிறங்கிய இங்கிலாந்து அணி 43.1 ஓவரில் 239 ஓட்டங்களை எடுத்து வெற்றியடைந்தது.

இங்கிலாந்தின் சார்பில் சோலங்கியும் புதிய வீரர் பெல்லும் ஆடடத்தை ஆரம்பித்தனர். இருவரும் அபாரமாக ஆடி முதல் விக்கெற் இணைப்பாட்டமாக 138 ஓட்டங்களைக் குவித்த நிலையில், பெல் 53 ஓட்டஙகளுடன் மற்சிக்கென்யேரியின் பந்துவீச்சில் தைபுவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தாா. அதைத் தொடர்ந்து சோலங்கியுடன் வோஹன் இணைந்து கொண்டார். சோலங்கி



89 பந்துகளில் தனது இரண்டாவது சதத்தை பூர்த்தி செய்த நிலையில் 100 ஓட்டங்களுடன மற்சிக்கென்யோியின் பந்து வீச்சில் ஹொன்டு விடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இங்கிலாந்து அணி 43.1 ஓவரில் 2 விக்கெற்றுக்களை மாத்திரம் இழந்து 239 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. வோஹன 54 ஓட்டங்களுடனும் ஸ்டிரஸ் 22 ஓட்டஙகளுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். உதிரிகளாக 10 ஓட்டங்கள் பெறபபட்டன. பந்துவீச்சில் வீழ்த்தப்பட்ட 2 விக்கெற்றுக்களையும மற்சிக்கென்யேரியே வீழ்த்தினார்.

இவ்வெற்றி மூலம் இங்கிலாந்து அணி 3:0 என்ற அடிப்படையில் முன்னிலையில் உளள துடன் தொடரையும் இப்போதே வென்றுள்ளது. (7)

## டேவிஸ் கிண்ண போட்டியில் மோயா, நடால் வெற்றி

ஸ்பெயினின் செவல்லே நகரில நடைபெறும் டேவிஸ் கிண்ண டென்னிஸ் போட்டிகளின இறுதிச் சுற்றுப் போட்டியில் 2:0 என்ற அடிப்படையில் ஸ்பெயின் அணி முன்னிலையில் உள்ளது.

அமெரிக்காவுக்கும் ஸ்பெயினுக்கும் இடையே நடைபெறும் இபபோட்டியில் நடந்து முடிந்த இரு ஒற்றையர் போட்டிகளிலும ஸ்பெயின் வெற்றி பெற்றுள்ளது.

இறுதிச் சுற்றின் முதலாவது ஒற்றையர் போட்டியில் அமெரிக்க வீரான மோடி (F) வ்ஸ் ஐ எதிர்த்து விளையாடிய ஸ்பெயின் வீரர் கார்லோஸ் மோயா 6:4, 6:2,6:3 என்ற நேர் செற்கணக்கில் வெற்றி பெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் அமெரிக்காவின் பிரபல டென்னிஸ் நட்சத்திரம் அன்ரி ரோடிக்கும் ஸ்பெயின் வீரர் ரவ



வாயல் நடாலும் மோதினர்.

27 ஆயிரம் ரசிகர்கள் மத்தியில நடை பெற்ற இப்போட்டி 4 மணித்தியாலங்கள் வரை நீடித்தது. இறுதியில் நடால் 6:7,6:2,7:6,6:2 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்றார். (து-7)

## மேரியன் ஜோன்ஸுக்கு எதிராக ஊக்க மருந்துக் குற்றச்சாட்டு

பிரபல அமெரிக்க குறுந்தூர ஓட்ட வீராங்கனை மேரியன் ஜோன்ஸ் மீது ஊக்கமருந்து



பாவனை தொடர்பாக பல குற்றச் சாட்டுகள சுமத்தப்பட்டுள்ளன.

சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில 5 பதக்கங்களை வென் றெடுக்க முன்பதாகவே ஆற்றல்களை மேம்படுதததும் ஊக்க மருந்துகள் அவருக்கு வழங்கப் பட்டதாக பிரபல மருந்து உற்பத்தித் தொழிற்சாலை உரிமையாளார் விக்ரர் ஹெண்டே தெரிவித் திருக்கிறார்.

மேரியன் ஜோன்ஸுக்கு பல தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்துகளை தாம் விநியோகித்ததாகவும் அவற்றை எவ்வாறு பாவிக்க வேண்டும் என்று விளக்கிக கூறியதாகவும் கூறியுள்ள ஹென் டே, தான் பார்த்துக் கொண்டிருக் கும போதே மேரியன் ஜோன்ஸ் ஊக்க மருந்தை ஊசிமூலம் ஏற்றியதாகவும் கூறியுள்ளார்.

சிட்னி ஒலிம்பிக்கில் 5 பதக்கங்களை வென்ற இவர், எதன்ஸ ஒலிம்பிக் போட்டியில் எந்தப் பதக்கத்தையும் பெறவில்லை.

தாம் ஊக்க மருந்து எதையும பாவிக்கவில்லை என ஆரம்பத்திலிருந்தே மறுத்து வந்திருக்கிறாா மேரியன் ஜோன்ஸ்விக்ரர் ஹான்டே மீது மான நஷ்ட வழக்குத் தொடரப் போவதாக.அறிவித்திருக்கிறார். ஜோன்ஸைத் தவிர வேறும் சில தடகள வீரர்களுக்கு சடட விரோத ஊககு மருந்துகளை வழங்கியமைக்காக வழக்குகளை ஹொன்டே எதிர் கொள்ளவிருப்பது குறிப்பிடத்தக்கது. (து-7)

# பக்தாத்தில் தீவிரவாதிகள் தாக்குதல்

# பொலிஸார் உட்பட 25பேர் பலியாயினர்



(பக்தாத்)

ஈராக்கில் அமெரிக்க இராணுவத துக்கு எதிராக இஸ்லாமியத் தீவிரவாதிகள் திடீர்த் தாக்குதல்களை அவ்வப்போது நடத்தி வருகிறார்கள் இந்தத் தாக்குதல்கள் நாள்தோறும் நீடித்துவருகிறது.

இதில் அப்பாவி மக்களும், பொலிஸாரும் உயிரிழந்து வருகிறார்கள்.

இந்த நிலையில் பக்தாத் நகரில் சனனி முஸ்லமகள அதிகம் வசிககும் அத்தாமாயா பகுதியல் நேற்றுமுன்தினம் அதிகாலை தொழுகையை முடித்துவிட்டு ஏராளமானவர்கள் திரும்பிக்கொண்டிருந்தனா. அப்போது மசூதி அருகில் பயங்கர சத்தத்துடன் கார்குண்டு வெடித்தது.

இந்தச் சம்பவத்தில் பொதுமக்கள் 14பேர் அதே இடத்தில் இறந்தார்கள்.

இது இவ்வாறிருக்க பக்தாத் நகரின் தென்மேற்குப் பகுதியிலுள்ள பொலிஸ நிலையம் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள். ராக்கெட் குண்டுகளை வீசியும், துபபாககியால் சுடடும தாககினாாகள்.

இதில் பொலிஸ் நிலையம் முன்பு நிறுத்திவைக்கப்பட்டிருந்த 2 வாகனங்கள் தீப்பிடித்து எரிந்தன. 11பொலிஸார் உயிரிழந்தார்கள். அந்தப் பகுதி முழுவதும் புகை மண்டலமானது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு காவலில் வைக்கப்பட்டிருந்த 50 கைதிகளைத் தீவிரவாதிகள் மீட்டுச்சென்றனர். ஜோர்டானைச் சேர்நத அபு முசப் அல்-ஜர்காவி என்ற தீவிரவாத இயக்கம் இந்தத் தாக்குதலுககான பொறுப்பை ஏற்றுக்கொண்டது.

அடுத்தமாதம் ஈராக்கில் பொதுத் தேர்தலை நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகிறது. இத்தேர்தலை சர்குலைக்கும வகையில் தீவிரவாதிகள் இதுபோன்ற தாக்குதல்களைத் தொடுத்துவருகின்றனா.

இந்தநிலையில், பக்தாத்தில் உளள கர்குக் என்ற இடத்தில் அமெரிக்க இராணுவத்தினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது குண்டுவெடித்து ஒரு வீரர் பலியானார்.

ஜோர்டான் எல்லை அருகிலுள்ள சோதனைச்சாவடி அருகிலும் நேற்றுக் கார் குண்டு வெடித்தது. இதில் ஏற்பட்ட சேத விவரம் உடனடியாகத் தெரியவில்லை. (ப)



தெற்கு சீனாவின் சான்யா நகரில் உலக அழகி இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடந்தது. 109 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் இதில் பங்கேற்றனர். இதில் உலக அழகியாக பெரு நாட்டைச்சேர்ந்த மாரியா ஜுலியா மான்டிலா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## ஒஸாமா எங்கிருக்கிறார் என எனக்குத் தெரியாது என்கிறார் முஷாரப்




ஒஸாமா பின்லேடன் உயிருடன் இருக்கிறார் என்று பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப் கூறியுள்ளார்.

பிடிபட்ட மற்ற அல்-கெய்டா தீவிரவாதிகளிடம் நடத்தப்பட்ட விசாரணையின் மூலம் இதைத் தெரிந்துகொண்டதாகவும். ஆனால் லேடன் எங்கு பதுங்கயிருக்கிறார் எனறு தனக்குத் தெரியாது என்றும ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபர் புஷ்ஷுடன் முஷாரப் சனிக்கிழமைக்கு முன்பாக ஒரு நாள் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார்.

யு.எஸ் -பாகிஸ்தான் வர்த்தகம் மற்றும் உறவு, ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள அல் -கெய்டா தலிபான் தவிரவாதிகள் மீது எடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகள், பாகிஸ்தானில் மக்களாட்சியை ஏற்படுத்துவது ஆகிய விடயங்கள குறித்துப் புஷ்ஷுடன் பேசப்பட்டுள்ளது. (ப)



டயோட்டோ நிறுவனம் சுற்றுச் சூழலுக்கு முற்றிலும் பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் புதிய வாகனங்களைத் தயாரித்துள்ளது. இவை தாவரப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளன. ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கண்காட்சியில் இந்தப் புதிய வாகனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. படத்தில் வீல்சேர் வடிவிலான ஒரு வாகனத்தை அழகி ஓட்டிக்காட்டுவதை ரசிக்கலாம்.

## ஒஸாமாவை பிடிக்க பாகிஸ்தானின் உதவியை கோருகிறது அமெரிக்கா

(வோஷிங்டன்)

தீவிரவாதி ஒஸாமா பின்லேடனைப் பிடிக்க பாகிஸ்தான் கூடுதல் உதவி செய்ய வேண்டும் என்று அமெரிக்கா கருத்துத் தெரிவித்துள்ளது.

அமெரிக்க அதிபர் புஷ்ஷை பாகிஸ்தான் அதிபர் முஷாரப் சந்தித்துப் பேசினார்.

இதற்கு முன்னதாக அமெரிக்காவின் பத்திரிகைப் பிரிவு செயலாளர் ஸ்காட மெக்கலன் நிருபர்களைச் சந்தித்தபோது கூறியதாவது,

தீவிரவாதி ஒஸாமா பின்லேடனைப் பிடிக்கும் முயற்சிக்குப் பாகிஸ்தான் கூடுதல உதவி செய்யவேண்டுமென்று நாங்கள எதிர்பார்க்கிறோம். எனினும் தலிபான் தீவிரவாதிகள், அல்-கெய்டா தீவிரவாதிகள் வேட்டையில் இரு நாடுகள்டையே நெருங்கிய உறவு இருந்துவருகிறது.

இந்த வேட்டையில் நாங்கள் தொடர்ந்து ஈடுபடவுள்ளோம். உளவுத்துறை விசயத்தில் நல்ல உறவு இருக்கிறது.

தீவிரவாதிகளுக்கு எதிரான போரில பாகிஸ்தான் உதவி குறிப்பிடத்தக்களவு உள்ளது.

பாகிஸ்தானின் ஜனநாயகம் மலர வேண்டும் என்பதில் அமெரிக்கா ஆர்வமாகவுள்ளது.

இருநாட்டு அதிபர்கள் சந்திப்பில் இதுகுறித்துப் பேசப்படலாம. ஜனநாயகப் பாதையில் பாகிஸ்தான் செலவது குறித்து வெளிப்படையாகவும், தனிப்படட முறையிலும் அமெரிக்கா ஆலோசனை கூறி வருகிறது. இவ்வாறு ஸ்காட் மெக்கலன் கூறினார். (ப)

## ஐ.நா. சபையின் செயற்பாடுகளுக்கு புத்துயிர் ஊட்ட நடவடிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகளுக்கு புத்துயிர் ஊட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் கோபிஅனான் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 59 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கோபி அனான் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 1945ஆம் ஆண்டு யூன் மாதம் 50நாடுகளின் பிரதிநிதித்துவத்தோடு அமெரிக்காவில் ஐக்கிய நாடுகள சபையின ஸ்தாபனத்துக்காக அடித்தளம இடப்பட்டது.

அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையில் தற்போது 191 நாடுகள் அங்கம்வகிக்கின்றன.

இரண்டாம் உலக மகாயுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கும் மக்களுக்கும் புனர்வாழ்வு அளித்து அபிவிருத்தி செய்யும் நோக்குடனேயே ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பிக்கப்பட்டது.

வன்முறைகள், அழுத்தங்கள், நோய்கள், வறுமை உட்பட மற்றும் பல பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட பெருமளவான மக்கள் உலகம் முழுவதிலும் இருக்கின்றனர்.

இவ்வாறான சமூகப் பிரச்சினைகளை வெற்றிகொள்வதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பு 2000ஆம் ஆண்டு மிலேனிய அபிவிருத்தித் திட்டதைத அறிமுகப்படுத்தியதென்று கோபிஅனான் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-8)



மெக்சிக்கோவில் குவான்ஜு வோட்டா பகுதியில் நடந்த சர்வதேச ஏர் பலூன் கண்காட்சியில் பறக்கவிடப்பட்ட வண்ணமிகு பலூன்கள்.

## நடிகர் ஜெமினிகணேசன் மருத்துவமனையில் அனுமதி

(சென்னை)

திடீர் உடல்நலக் குறைவு காரணமாக நடிகர் ஜெமினி கணேஷன் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

பழம்பெரும் நடிகர் ஜெமினி கணேஷன் மிஸியம்மா, மாயா பஜார், உன்னால் முடியும் தம்பி, ஔவை சண்முகி உள்ளிட்ட நூற்றுக்கணக்கான திரைப் படங்களில் நடித்தவர்.

சமீபத்தில் தனது பிறந்தநாள் விழாவைக் கொண்டாடினார். இந்நிலையில நேற்று முன்தினம் காலை 10மணிக்கு அவருக்குத் திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டது.

இதையடுத்து அவர் சென்னை நுங்கமபாக்கத்திலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். (ப)

மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர் - குறள்

வலம்புரி

## சமூக ஏற்றத்தாழ்வுகளே கோஷ்டி மோதல்களுக்குக் காரணம்

குருநகர் பகுதியில் இருபிரிவினருக்கிடையே ஏற்பட்ட கோஷ்டி மோதலானது இதுவரை தீர்வின்றி எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற நிலைப்பாட்டில் உள்ளது.

குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்களும், குருநகரை அண்மித்த இராஜசிங்கம் வீதியைச் சேர்ந்தவர்களும் கோஷ்டி மோதலில் ஈடுபட்டதனால் வீடுகள் உள்ளிட்ட பெறுமதியான சொத்துக்கள் எரிந்து நாசமாகியுள்ளது.

யாழ். நகர மையத்திலிருந்து 3 கிலோமீற்றர் தூரத்துக்குள் அமைந்திருப்பது குருநகர் பகுதி. எனினும் அப்பகுதியின் அபிவிருத்தி நிலை என்பது மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

நெருக்கமான குடிசனத்தொகை, வசதிகளற்ற வீடுகள், பாடசாலை மாணவர்களின் இடைவிலகல் என்ற பல்வேறு பிரச்சினைகள் இப்பகுதியில் காணப்படுகிறது.

அதேவேளை திருநகர் என்றழைக்கப்படும் இராஜசிங்கம் வீதியில் வசிப்பவர்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் பரிதாபத்திற்குரியது. இப்பகுதியில் இருக்கின்ற அநேகர் யாழ். மாநகர சபையில் தொழிலாளர்களாக வேலைசெய்கின்றனர். இருந்தும் அவர்கள் எதுவித வருமானமும் உழைக்காதவர்கள் போலவே தமது வாழ்க்கையை நடத்திச் செல்கின்றனர்.

அதேவேளை இப்பகுதியில் உள்ள மாணவர்கள் 5 ஆம், 6 ஆம் தரத்துடன் தமது படிப்பை நிறைவு செய்துகொள்கின்றனர். இன்றைய 21 ஆம் நூற்றாண்டில் இப்படியும் ஒருநிலை என்று எண்ணத்தோன்றுமளவில் இவர்களின் வாழ்க்கைநிலை பரிதாபத்திற்குரியதாகவுள்ளது.

யாழ்ப்பாண நகர மையத்திலிருந்து 3 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள நல்லூர், நீராவியடி, வண்ணார்பண்ணை போன்ற இடங்கள் நாகரிகத்தின் போக்கிற்கமைய முன்னேற்றமடைந்து செல்கின்ற அதேநேரம் யாழ். நகர மையத்திலிருந்து 3 கிலோ மீற்றர் தூரத்தில் - கரையோரப் பகுதியில் அமைந்துள்ள குருநகர், திருநகர் போன்ற இடங்களில் அபிவிருத்திநிலை மிக மோசமாக இருப்பது யாழ்ப்பாணத்திலுள்ள சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வின் வெளிப்பாடாகும்.

வசதிபடைத்தவர்கள் உயர்ந்த பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ள அறிவியலிலும், பொருளாதாரத்திலும் பின்னடைவில் உள்ளவர்கள் சிறிய பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதுடன் உயர் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பத்தையும் தடுத்துவிடுகின்றனர்.

குடும்பத் தொழிலைச் செய்வதற்கு படிப்பு தேவையில்லை என்ற நிலைப்பாட்டில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இந்த மிகக் கொடூரமான நிலைமையிலுள்ள இடங்களில் குருநகரும், திருநகரும் அடங்கும் என்பதை கூறித்தான் ஆகவேண்டும்.

குருநகர், திருநகர் ஆகிய பகுதிகளில் மிகப் பிரபல்யமான இரண்டு ஆண்கள் பாடசாலையும், ஒரு மகளீர் பாடசாலையும் இருக்கின்ற போதிலும் இங்கு கற்கின்ற மாணவர்களில் 90 வீதமானவர்கள் வெளியிடங்களில் இருந்துவருகின்றனர். சுருங்கக்கூறின் குருநகர், திருநகர் பகுதியிலுள்ள பிரபலமான கல்லூரிகளில் கல்வி கற்பதற்கே இந்தப் பகுதியைச் சேர்ந்த மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

இத்தகைய நிலைமை காரணமாகவே குருநகர், திருநகர் போன்ற இடங்களின் மேம்பாடு தாழ்வுநிலையில் இருப்பதுடன் அங்கு சிறு பிரச்சினைகள் கூட பெரிய கோஷ்டி மோதல்களாக விஸ்வரூபம் எடுக்கின்றன.

இத்தகைய நிலைமை மாற்றமடையவேண்டுமாயின் இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு கல்வி வசதிகள் வழங்கப்படவேண்டும். பின்தங்கிய சமுதாயம் ஒன்று உயர்ச்சி பெறவேண்டுமாயின், அந்தச் சமுதாயம் மறுமலர்ச்சி பெறவேண்டுமாயின் அறிவியலே ஒரேவழியாகும்.

எனவே சமூக வேறுபாடுகளை மறந்து அரச, அரசசார்பற்ற, சமய அமைப்புகளின் பிரதிநிதிகள் பணியாற்றவேண்டும்.

# 'சிசு உதான' சாதனையாளர்கள் போட்டிக்காக கொழும்புக்கு!

## யாழ். மாவட்டத்திலிருந்து ஐவர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கிக் கிளைகளில் "சிசு உதான கணக்கு" வைத்திருக்கும் பாடசாலை மாணவர்களில் சாதனையாளர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டியில் பங்கு பற்றுவதறகாக மாவட்டத்தில் இருந்து 5 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். இந்துக்கல்லூரியைச் சேர்ந்த குமாரவடிவேல் குருபரன், கதிரேசபிள்ளை தர்சனன், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியைச் சேர்ந்த சுகனயா சந்திரபாலன, தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த ஜீவிகா விவேகானந்தன் மற்றும் சென் பற்றிக்ஸ் கலலூரியைச் சேர்ந்த யேசுதாசன நியூமன் ஆகியோரே இதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் மக்கள்வங்கிக் கிளையினால் பரிசு வழங்கப்படவுள்ளது.

தெரிவு செய்யப்பட்டுள்ள இம் மாணவர்கள் மக்கள் வங்கியில் கடந்த ஓகஸ்ட் மாதம் 31 ஆம திகதிக்கு முன்னர் சிசு உதான கணக்கை ஆரம்பித்து வைப்புச் செய்திருந்தால் பரிசு இரட்டிப்பாக வழங்கப்படவுள்ளது.

தெரிவு செய்யப்பட்டுள்ள இவ் 5 மாணவர்களும் எதிர் வரும் 29 ஆம திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேசமாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருககும் போட்டியில் பங்குபற்றுவதற்காக மக்கள் வங்கியினால் 28 ஆம் திகதி கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இவ்வாறு எல்லா மாவட்டங்களிலும் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 5 சாதனையாளர்கள் போட்டிக்காக கொழும்பிற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.




அன்றையதினம் போட்டியில் பங்குபற்றும் சாதனையாளர்களில் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் 10 சாதனையாளர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா பரிசாக வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-19)

## பருத்தித்துறையின் அபிவிருத்திக்கு 3.455 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்திக்கென யாழ். பாராளுமன்ற உறுப்பினர்கள் தம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியிலிருந்து 3.455 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளனர்.

இதில் பாடசாலைகளின் அபிவிருத்திகளுக்கென கணிசமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் அல்வாய் ஸ்ரீலங்கா பாடசாலை, துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிஷன் தமிழ கலவன் பாடசாலை, அம்பாள் வித்தியாலயம், கற்கோவலம் மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் தமிழ் கலவன பாடசாலை, தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம் போன்ற பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படும்.

அத்துடன் இந்நிதி மூலம் புலோலி, தம்பசிட்டி, அல்வாய், தும்பளை, துன்னாலை, பருத்தித்துறை, பொலிகண்டி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலுள்ள சனசமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள் மற்றும் பொது மண்டபங்கள், கடற்றொழில் சங்கங்கள் ஆகியனவும் அபிவிருத்தி செய்யப்படும்.

இதற்கான முன்ஏற்பாடான நடவடிக்கைகளில் பிரதேச செயலகம் ஈடுபட்டுள்ளது. (ப-35)

## அனலைதீவில் 50 குடும்பங்களுக்கு அரசகாணிகள் பகிர்ந்தளிக்கப்படும்

(ஊர்காவற்றுறை)

அனலைதீவில் உள்ள அரசகாணிகளை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை எதிர்வரும் 17 ஆம் திகதி இடம் பெறவுள்ளது. அனலைதீவில் உள்ள காணி வசதி அற்ற குடும்பங்களுக்கு இதில் காணித் துண்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இவ் அரசகாணி பகிந்தளிக்கும நடவடிக்கை மூலம் 50க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு காணித்துண்டங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. (ப-75)

## குழாய்க் கிணறு நிர்மாணம் மழையினால் இடைநிறுத்தம்

(சுதுமலை)

மானிப்பாய், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் கீழ் உள்ள பகுதிகளில் நிலவும் குடிநீர்ப் பற்றாக்குறையை நீக்கும் நோக்குடன் யுனிசெப் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் குழாய்க்கிணறுகள் அமைக்கும் பணிகள் பருவமழை காரணமாக தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் உள்ள தாழவான பகுதிகளில் வெள்ளம் தேங்கி நிற்கின்றதுடன், குறைந்த ஆழத்தில் ஊற்று தென்படுவதால் சரியான முறையில் கிணறுகளை அமைக்க முடியாமலும் போய் விடுகிறது. இதனைக்கருத்திற் கொண்டே இப்பணிகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும், ஆனால் குடிநீர்ப்பற்றக்குறை நிலவும் இனங்காணப்பட்ட பிரதேசங்களில பல கிணறுகள் ஏற்கனவே அமைத்து முடிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-252)

# அரசகரும மொழியாக தமிழை செயற்படுத்த விஷேடகுழு நியமிப்பு

(கொழும்பு)

தமிழ் மொழியை அரசகரும மொழியாகச் செயற்படுத்துவதற்காக விஷேட குழுவொன்றை நியமித்திருப்பதாக அரசியல் யாப்பு விவகார அமைச்சர் டி.யு. குணசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த 1987 ஆம ஆண்டு தமிழ மொழி அரசகரும மொழியாக பிரகடனப்படுத்தப்பட்ட போதும் அது உரியமுறையில் செயற்படுத்தப்படவில்லை. அமைச்சரவையில சமர்ப்பிக்கப்பட்ட எமது யோசனைக்கு அமைவாக ஜனாதிபதியால் இநதச் குழு நியமிக்கப்படடுள்ளது.

என்னுடன் இந்தக் குழுவில் மேலும் மூன்று அமைச்சர்கள் இடம் பெற்றுள்ளனர். தமிழ் மொழி அரசகரும மொழியாக செயற்படுத்தப்படாமைக்கான காரணங்கள, அதற்கான தீர்வுகள் குறித்து இந்தக் குழு விரிவாக ஆராயும். குறிப்பிட்ட கால எல்லைக்குள் எமது ஆய்வு அறிக்கை அமைசசரவைக்குச் சமர்ப்பிக்கப்படும். அரச சேவையில் கடமையாற்றுபவாகளுக்கு தமிழ் மொழியைக் கற்பித்தல் மற்றும புதிதாக அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படுபவர்களுக்கு தமிழ் மொழியை பயிற்றுவித்தல், அதில் காணப்படும் குறைபாடுகளை நிவிர்த்தி செய்தல் ஆகியன தொடர்பாகவும் இக் குழு விஷேட கவனம் செலுத்தவுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேறகொள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-9)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் உதவிப்பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மகாண அரசாங்க சேவையல் உள்ளவர்களுக்கு இருக்ககூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

அத்துடன் விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொனறில் இந்துநாகரிகம் அல்லது இந்து கலாசாரம் அல்லது இந்துசமயம் ஆகிய பாடங்களில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் உயர்வகுப்பு சிறப்புப்பட்டச சான்றிதழ் அல்லது முது நிலை மானிப்பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது மேற்குறிப்பிட்ட பாடங்களில் ஏதாவது ஒன்றுடன் கூடியதான பல்கலைக்கழக பட்டச்சான்றிதழுடன் இந்துசமய, கலாசார அலுவலகள் திணைக்களத்தில் 10 வருடங்கள் சேவையுள்ள ஆராய்ச்சி அலுவலர் அல்லது கலாசார அலுவலர் அல்லது தகவல் அலுவலராக பணியாற்றி இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பதவிக்கான விண்ணப்பப்படிவங்கள் எதிர் வரும் 2005.01.28 ஆம் திகதிக்கு முன்பாக 'பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248 1/1 காலி வீதி, கொழும்பு-04' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (ந-19))

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

நீங்கள் பிரார்த்தனை செய்கிறீகள். ஏதாவது நிவேதனம் செய்கிறீர்கள். இவை ஒருவனது ஆன்மீக சக்தியை அதிகரிக்கச் செய்கின்றன என்று ஒரு நம்பிக்கை இருந்தது. மந்திரங்கள், மலர்கள், உருவங்கள், கோயில்கள், தீபாராதனைகள் போனற சடங்குகள் எல்லாமே மனதை ஒரு குறிப்பிட்ட நிலைக்குக் கொண்டு வருகின்றன. ஆனால் அந்த நிலை ஆன்மாவிலேயே உள்ளது. வேறு எங்கும் இல்லை.

சுவாமி விவேகானந்தர்

# சரத் அம்பேப்பிட்டிய கொலைச் சந்தேகநபர் மாதம் ஒரு மில்லியன் பொலிஸாருக்கு வழங்கினார்

(கொழும்பு)

மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேப்பிட்டிய கொலையின் முக்கிய சந்தேகநபரான நௌவர் கைது செய்யப்பட்டதை அடுத்து அவர் தொடர்பான பல தகவல்கள் தொடர்ந்தும் வெளிவந்த வண்ணம் உள்ளன. அவரின் கைத்தொலைபேசி அழைப்புக்களை ஆராய்ந்ததில் கொழும்பின் பல சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், எஸ்.எஸ்.பிக்கள், ஏ.எஸ்.பிக்கள், ஓ.ஐ.சிக்கள் பலருடன் இவருக்கு நெருங்கிய தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது.

அத்துடன் நௌவர் கைது செய்யப்பட்டதை அடுத்து அவரின் கைத்தொலைபேசிக்குரிய கம்பனியிலுள்ள கணினிகளில் உள்ள தரவுகள் பலவற்றை அழிப்பதற்கு பொலிஸ் அதிகாரிகள் பலர் முயன்றுள்ளனர். மேற்படி பொலிஸ் அதிகாரிகளுக்கு நௌவர் மாதம் ஒன்றுக்கு ஒரு மில்லியன் வழங்கி வந்துள்ளதும் தெரியவந்துள்ளது.

நௌவர் கைதுசெய்யப்படுவதற்கு முதல்நாள்கூட சிரேஷ்ட டி.ஐ.ஜி.ஒருவர் அவருடன் நீண்ட நேரம் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

நௌவர் கைது செய்யப்பட்ட 24மணி நேரத்தினுள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதன் மூலம் மேலதிக விசாரணைகள் இடம்பெறுவதை தடுக்கவும் இவர்கள் முயன்றுள்ளனர். (த-6)

## வலம்புரிச் செய்திக்கு...

பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி சு.ரவிராஜ் அவர்கள் பிரசுரிக்கப்பட்ட செய்தி தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார்.

அவரின் கோரிக்கைக்கு மதிப்பளித்தும், 'பத்திரிகை தர்மத்தை' பேணுகின்ற வலம்புரி என்ற வகையிலும் தாதியர்களால் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் இங்கு அப்படியே தரப்படுகின்றது.

பணிப்பாளர்
அரசினர் பொதுவைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

தாதிய பரிபாலகர்
அரசினர் பொதுவைத்தியசாலை.
யாழ்ப்பாணம்.

ஐயா:

'இவர்களும் தாதியர் தானா' - வலம்புரி செய்தி 05-12-2004

மேற்படி தலைப்பிலான செய்தி 05.12.2004 வலம்புரி பத்திரிகையின் பக்கம் 08 இல் வெளிவந்துள்ளது இந்த செய்தியானது தெளிவற்ற வெளிப்பாட்டுடன் காணப்படுவதால் அனைத்து தாதியர்களும் கவலையும் அதிர்ச்சியும் அடைந்துள்ளோம். இது சம்பந்தமாக நாம் தங்களிடம் வெளிப்படுத்தும் விடயங்களாவன.

1. குறிப்பிட்ட செய்தி எந்தவித ஆதாரமற்றது
2. எல்லா தாதிய உத்தியோகத்தரையும் வேதனைக்குள்ளாக்கியுள்ளது.
3. அவ்வாறு ஏதும்'நிகழ்வு' நடந்திருப்பின் அது சம்பந்தமான பிரிவு, பெயர், விபரம், பாதிப்பு சம்மந்தமான விபரத்தையும் தெரிவித்து செய்தி வெளியிடல் வேண்டும். அவ்வாறில்லாவிடில் இந்தச் செய்தி தவறானது என்று மன்னிப்புக்கோரி மறுப்புச்செய்தி நாளைய பத்திரிகை முன்பக்கத்தில் வெளியிடவேண்டும்.
4. இவ்வாறு ஏதும் நடவடிக்கை எடுக்கப்படாவிடில் நாம் இது சம்மந்தமாக தாய்த் தொழிற்சங்கம் அறிவுறுத்தலின்படி தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என்பதை மன வேதனையுடன் தெரிவித்து கொள்கின்றோம். நன்றி.

## ஆசிரியர் குறிப்பு

தாதியப்பணி தெய்வீகமானது அதிலும் யாழ். போதனா வைத்திய சாலையை பொறுத்தவரை அங்கு கடமையாற்றும் தாதியர்கள் போர்ச்சூழலிலும் அர்ப்பணிப்போடு செயலாற்றியவர்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை.

இந்நிலையில் நேற்றையதினம் வலம்புரியில் வெளிவந்த இவர்களும் தாதியர்களா...? என்ற செய்தி யாழ்.போதனா வைத்திய சாலையில் கடமையாற்றும் அனைத்து தாதியர்களையும் குறிக்கவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவ்வாறு அந்தச் செய்தி பொதுமைப்படுத்தப்பட்டுள்ளதாக கருதி, அர்ப்பணிப்போடு செயலாற்றுகின்ற தாதியர்களுக்கு அது துயரத்தை ஏற்படுத்திஇருப்பின் அதற்காக மனம்வருந்துகின்றோம்.

நேற்றையதினம் வலம்புரியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தாதியர்கள் தமது கவலையை வெளிப்படுத்தி இருந்தனர். அதற்கு உடனடியாகவே வலம்புரியின் பிரதம ஆசிரியர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் ஒருவருடன் செய்திபற்றிய விளக்கத்தை வழங்கியிருந்தார்.

எனவே நேற்றையதினம் வலம்புரியில் வெளிவந்த செய்தி யாழ்.போதனாவைத்தியசாலையில் கடமைபுரியும் அனைத்து தாதியர்களையும். குறிக்கவில்லை என்பதை மீள வலியுறுத்தி கூறுகின்றோம்.

அதேவேளை தெய்வீகமான தாதியப்பணியில் ஈடுபட்டுள்ள ஒருசிலர் அந்தப்பணியின் தூய்மைக்கு இழுக்கு ஏற்படும் வகையில் செயற்படுகின்றார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை.

இவ்வாறு ஒரு சிலரின்செயலானது அர்ப்பணிப்போடு சேவையாற்றுபவர்களையும் பாதிக்கவே செய்கிறது. இது துரதிஷ்டமானது ஆகும். (ஆ.ர்)

# வல்வெட்டித் துறையில் திமிங்கிலம் கரை ஒதுங்கியது

வல்வெட்டித்துறை கப்பலடி கோயில் பகுதியில் 12 அடி நீளமான திமிங்கிலம் ஒன்று நேற்றுக் காலை கரை ஒதுங்கியுள்ளது.

கரை ஒதுங்கிய திமிங்கிலத்தை நேற்றுக்காலை முதல் பெருமளவான மக்கள் பார்வையிட்ட வண்ணமிருந்தனர்.

மேற்படி திமிங்கிலத்தை 50 ஆயிரம்ரூபா பெறுமதிக்கு விற்பனை செய்வதற்கு அப்பகுதியிலுள்ளவர்கள் முயன்ற போதும் படையினர் அதற்கு அனுமதிக்கவில்லைஎனத் தெரிவிக்கப்படுகிறது.

அப்பிரதேசத்திலேயே திமிங்கிலத்தை புதைக்கும்படி படையினர் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி திமிங்கிலம் சுமார் ஆயிரம் கிலோக்கிராம் நிறை மதிக்கத்தக்கது எனத் தெரிவிக்கப்பட்டது. (த-106)

## சமாதானப்...

தமது பூரண ஆதரவைத் தெரிவித்திருப்பதால் விரைவிலேயே பேச்சுக்கள் ஆரம்பமாகும் என்ற நம்பிக்கை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஏற்பட்டுள்ளது.

ஆகையால் அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதையே தனது முதன்மையான பணியாகக்கொண்டிருக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மாவீரர்தின உரையில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் விடுத்த அவசர அழைப்பை ஏற்கமறுக்கும் தொனியில் அரச தகவல் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ள நிலையில் ஜயந்த தனபால இவ்வாறு கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (த-04)

## அனுசரணை...

காட்டவேண்டும். நோர்வேயின் இம் முயற்சிக்கு எம்மால் இயன்ற உதவியை வழங்க நாம் தயாராகவுள்ளோம்.

விடுதலைப் 'புலிகளின் ஆதரவு அமைப்பான நோர்வேத் தமிழ்ச் சங்கக் கூட்டத்தில் அந்நாட்டுப் பிரதமர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் பிரதான அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் கலந்துகொண்டமை, நோர்வேயில் விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்ட அனுமதிக்கப்பட்டுள்ளமை, கடற்புலிகளுக்கு நோர்வேயில் பயிற்சி அளிக்கப்பட்டுவருகின்றமை, அனுசரணையாளர் பணியிலிருந்து விலகி மத்தியஸ்தராகச் செயற்படுகின்றது. இப்படி பல குற்றச்சாட்டுக்களை ஜே.வி.பி நோர்வே மீது சுமத்தி அதன் காரணமாக இலங்கை அரசு நம்பிக்கை இழந்துவிட்டதாக சில வாரங்களுக்கு முன்பு கடிதமொன்றை அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-04,09)

# எம்.பிக்களுக்கு புதிய வாகனங்கள் அடுத்த வருடம் முதல் பல சலுகைகள்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் தமது வாகனங்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு கைத்தொலைபேசி கொள்வனவு செய்வதற்கென சலுகைகளைப் பெறவுள்ளனர்.

புதிய எம்.பிக்கள் அடுத்த வருடம் முதல் புதிய வாகனங்களையும் பெறவுள்ளனர். இத்தகவலை பாராளுமன்ற விவகார அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ தெரிவித்தார். அண்மையில் ஏற்பட்ட எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாகவே இந்த சலுகைகள் வழங்கப்படவுள்ளன. இவர்களுக்கு கைத்தொலைபேசி சலுகை விலையில் வழங்கப்படவுள்ளது.

கட்சி அங்கத்தவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி எம்.பிக்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு 10,000 ரூபா வழங்கப்படவுள்ளது.

இதன்படி இவர்களின் தனிப்பட்ட ஊழியர்களின் ரயில்வே கட்டணங்களிலும் சலுகை வழங்கப்படவுள்ளது. (த-6)

## மார்த இறுதியில் ஜனாதிபதி தாய்லாந்து விஜயம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இம்மாத இறுதிப் பகுதியில தாய்லாந்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். அங்கு செல்லும் அவர் இரு நாடுகளுக்குமிடையிலான பாதுகாப்பு கூட்டுறவு பற்றி கலந்துரையாடவுள்ளார்.

இந்திய - இலங்கை உத்தேச ஒப்பந்தத்துக்குப் பல்வேறு தரப்பிலிருந்தும் பாரிய எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ள வேளையில் தாய்லாந்துடன் பாதுகாப்புக் கூட்டுறவு பற்றிக் கலந்துரையாடி இணக்கப்பாடு காண்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (04)







## மொழிபெயர்ப்பாளராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாயன்மார் கட்டைச்சேர்ந்தவரும் யாழ். மாநகராட்சி மன்றத்தின் சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகருமாகிய துரையப்பா மகாதேவன், நீதி, நீதித்துறை



மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அங்கீகாரம்பெற்ற மொழிபெயர்ப்பாளராக நியமனம் பெற்றுள்ளார்.

இதுதொடர்பில் அவர் யாழ். மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா முன்னிலையில் அணமையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். (ந)

## மத்தியகல்லூரியின் சாதாரண தர மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியினூடாக இம்முறை க.பொ.த சாதாரணதர தேர்வுக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதியட்டை வழங்கும் வைபவம் இன்று நண்பகல் 12.00 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் க.இராசதுரை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சமயக் குருமார், பெற்றோர், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஆசி வழங்கும் நிகழ்வு நடைபெறும்.

'மாதா, பிதா, குரு, தெய்வம்' என்ற தொனிப்பொருளில் தமிழர்களின் பாரம்பரிய முறைப்படி நடைபெறும் இந் நிகழ்வுக்கு உரிய சகல மாணவர்களின் பெற்றோர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். (த)

# சமாதான முயற்சியில் அரசாங்கம்...

ஜே.வி.பியின் இந்த நடவடிக்கைகளினால் குரோதத்தை ஏற்படுத்தும் அரசியல் சூழ்நிலையொன்று நாட்டில் தற்போது உருவாகி வருகின்றது. இந்நிலை தொடருமானால் சமாதான முயற்சிகளின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும்.

பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்து பேசமுடியாத நிலை இன்று இருக்கின்றது. அன்று நாங்கள் முழு சர்வதேசத்தின் ஆதரவினை பெற்றுக்கொண்டு பேசினோம். இன்று சர்வதேச சமூகம் பேச்சுவார்த்தைக்கு செல்லுமாறு இலங்கைக்கு வற்புறுத்துகின்றது. இது வருந்தத்தக்க ஒரு விடயமாகும்.

சமாதான முன்நகர்வுகளை முன்னெடுத்து செல்வதற்கு ஜே.வி.பிக்கு அக்கறையோ, அவசியமோ இல்லை. ஆனால் அரசுக்கு இதில் தேவையிருக்கின்றதா என்பது குறித்து நாம் கேள்வி எழுப்பவேண்டும்.

தற்போது நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்த ஒப்பந்தமானது இழுபறிநிலையில் இருக்கின்றதுடன் இந்த இழுபறிநிலையில் தொடர்ந்துகொண்டு செல்ல முடியாது. இவ்வாறு தொடர்ந்து சென்றால் மீண்டும் யுத்தத்திற்குச் செல்லவேண்டிய நிலை ஏற்படலாமென்று நேசநாடுகள் எமக்கு எச்சரிக்கின்றன.

இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தம் குறித்து குற்றஞ்சாட்டி ஆட்சிக்கு வந்த கூட்டமைப்பு அரசாங்கம் இன்று பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளது.

தாம் ஆட்சிக்கு வந்தால் புலிகளின் குரங்குப்பாஞ்சான் முகாமை அகற்றுவதாக கூறினர். ஆனால் இந்த முகாம் தற்போதும் இருக்கின்றது விடுதலைப்புலிகள் மாவீரர் தினத்தை கொடியேற்றி அனுஷ்டிக்க இடமளிக்கப்பட்டது நாம் ஆட்சியிலிருந்தபோது வழங்கிய வாய்ப்பையே கூட்டமைப்பு அரசாங்கமும் வழங்குகின்றது.

கூட்டமைப்பு அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தினால் மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் இல்லை. நாட்டின் தற்போதைய நிலையை மறைக்கும் வகையில் இந்த வரவு செலவுத் திட்டம் அமைந்துள்ளது.

கூட்டமைப்பு அரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கை காரணமாக மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

இம்மாநாட்டில் நடப்பு வருடத்திற்கான தலைவராக ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். பிரதித்தலைவராக கருஜயசூரியவும் பொதுச் செயலாளராக என்.டி.கே. கே.வேறக்கொடவும் தவிசாளராக மலிக் சமர விக்கிரமவும். பொருளாளராக விமல் வீரரத்தினவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை 1946ம் ஆண்டு ஐ.தே.கட்சி உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-8)


## உடன் தேவை

❖ அலுவலகச் செய்தியாளர்கள் - ஆண்கள் (இரவுக் கடமை)
❖ விளம்பர சேகரிப்பாளர்கள் (இருபாலாரும்)

06-12-2004 ( இன்று )பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வரவும்

குறிப்பு:-

யாழ்.நகரமையத்திலிருந்து 8.கி.மீ. தூரத்திற்குள் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவர்கள் மட்டும்.

நிர்வாக உத்தியோகத்தர்
வலம்புரி-சங்குநாதம்.


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.